தென்மொழி

மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே!

பொய்யர்கள் புளுகர்கள் பொல்லாக் கயவர்கள்
பொழுதெலாம் தந்நலம் கருதும் பேயர்கள்
மெய்யர்கள் போலவே உலாவரு கின்றனர்;
மேலுக் குழைப்பதாய் உரையளக் கின்றனர்!
வெய்ய உழைப்பினில் மேனித் தசைகளை
விளர்ந்துள நாடி நரம்புமண் டிலங்களை
நெய்யாய் உருக்கி உழைக்கும் மக்களோ
நித்தமும் செத்துப் புதைகின்றார் நாட்டிலே!

பிழைக்கவும் வழியிலை; பேசவும் பொழுதிலை!
பின்னும் இருப்பதால் யார்க்கும் பயனிலை!
உழைக்கும் மக்களும் உழவரும் தொழிலரும்
ஒன்றிணைந் தெழுந்திடில் உண்மை சாகுமோ?
அழைக்கும் விடுதலை ஆர்ப்பரிப் பெழுந்தது!
அனைவரும் ஒன்றெனும் நாளும் கிளர்ந்தது!
மழைக்கும் வெயிற்கும் மலைத்தது போதும்!
மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே!

சுவடி : 21
ஓலை : 3

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை 1.25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0: 1045 : அன்புள்ள ஐயா, வணக்கம் 'தென்மொழி' சுவடி 20. ஓலை 11-இன் ஆசிரியருரை வெம்பி வெதும்பிய உள்ளத்திற்கு அமைவாய் அமைந்திருந்தது.

கல்வி அமைச்சரின் கூற்றுக்குத் தக்கவிடை தாங்கள் மட்டும் அளித்துள்ளமை தமிழகத்தின் தன்மானத்தின் கையறுநிலை இன்னும் மாறவில்லை என்பதைத் தவிர வேறு எதைக்காட்டுகிறது.

தனித்தன்மை உடையது 'தென்மொழி' இயக்கமே. என்றும் விழிப்புறும் தமிழினத்தை நிறைவு செய்யட்டும் தென்மொழி.

நன்றி — அன்புடன், சி. முத்தையா, திருச்சி-10.

0: 1046 : ஐயா, வணக்கம். தமிழ்நிலம், 28-10-84 இதழில், 'போலியோ! பொதுவுடைமையோ!' என்ற தலைப்பில் திரு இளந்தமிழன் எழுதியுள்ள கட்டுரையில் 'என் படையில் முட்டாள்கள் தாம் தேவை என்பவர், எப்படித் தலைவனாக இருக்க முடியும்' என்று ஒரு பொதுவுடைமையாளர் பெரியாரைப் பற்றிக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரியார் எந்தச் சூழலில், ஏன் அவ்வாறு கூறினார் என்பது பல்வேறு இடங்களில் விளக்கப்பட்டுள்ளது.

ஆனால் 'பொதுவுடைமைதான் என்ன?' என்ற நூலில் ராகுல சாங்கிருத்தியாயன், '...... பொது உடைமைக் கொள்கைப் போராட்டத்தின் அடிப்படையாக மூளை வேலை செய்பவர்களை ஏற்படுத்தாமலிருப்பதுதான் நல்லதென்று தோன்றுகிறது'. (பக்கம்-9) என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அவர் தரும் விளக்கம் பொய்க் களஞ்சியமாக மட்டுமன்றிச் சிந்தனையாளன் என்றாலே பொதுவுடைமையாளர்கட்குப் பேரச்சம்தான் என்பதனையும் தெளிவுபடுத்துகிறது. அதனால் தானே, பொதுவுடைமை நாடுகளில் உள்ள பாட்டாளி மக்களுக்கு மாந்தவியல் (Humanities) படிப்பே மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள், அறியாமையை எதிர்த்துப் போரிட்ட பெரியாரை பகடி செய்வது பேதைமையே. நன்றி, தங்கள் உண்மையுள்ள,

— அரசன்காய்சினவழுதி, திருப்பூர்-7.

0: 1047 : அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, திருச்சி நடுவண் சிறையாளி எண் 71931 சுந்தர் வரையும் மடல்! அன்புள்ள ஐயா! வணக்கம்!

'தங்களின் ஆற்றல்மிகு படைப்பான தமிழ்ச்சிட்டு, தென்மொழி கிடைக்கப்பெற்றேன். ஆனால் ஒன்று! அரசியல் கட்சிகளின் அட்டூழியங்களையும், சீர்கெட்டுத்திரியும் இக் குமுகாய இழி நிலைகளையும் வெளிக்கொணர்ந்து விடியலைத்தேடி வெந்து தணியும் வெறுக்கையுற்ற மக்களுக்கு விடியலை உணர்த்தும், செம்பரிதியாய், சுற்றித் திரியும் 'தமிழ்நிலம்' இரண்டு கிழமைகளாகத் தடைப்பட்டு நிற்கிறது! பற்றாக்குறை காரணமாக இருக்கலாம்! ஆனால் படித்தறிய விரும்புகின்றேம். 'தமிழ்நிலம்' இதழ் கிடைக்க ஆவன செய்ய அன்புடன் வேண்டுகின்றேன். மேலும் 11-11-84

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன தென்மொழி நா. இளமாறன். தென்மொழி பழநி-மகிழ்நன

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

சுவடி:21] தி.பி.௨௦கரு சிலை [திச-84 சன-85] [ஓலை-3

கலைஞர்க்கு ஓர் இறுதி வேண்டுகோள்!

தமிழினத்தைக் காக்க வாருங்கள்!

பேரன்புடைய கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம், இது வரலாற்று நிலையில் நான் உங்களுக்கு எழுதும் மூன்றாவது மடல். ஆனால் இதுவே நான் உங்களுக்கு எழுதும் இறுதி மடலாகவும் இருக்கும். இறுதி என்பதற்கு எத்தனையோ பொருள்கள் இருக்கலாம். ஆனால், இந்த மடலிலுள்ள இறுதி என்னும் சொல்லுக்கு உள்ள பொருள் இனிமேல்தான் உங்களுக்கு விளங்கும்.

நான் உங்களை மூன்றுமுறை நேரில் சந்தித்து என் உள்ளக் கருத்துகளை, மிகவும் நெருக்கமாகவும் உருக்கமாகவும் உண்மையாகவும் உங்கட்குப் புலப்படுத்தியிருக்கின்றேன். தமிழ்நலமும் தமிழின நலமும் தமிழ்நாட்டு நலமும் நாடுகின்றவன் என்ற முறையில், உங்களிடம் இவ்வளவு வெளிப்படையாகவும் ஒளிவுமறைவு இன்றியும் உண்மைகளை எவரும் சொல்லியிருக்க முடியாது. இந்த மூன்றுமுறையில்லாமல், எத்தனையோ முறைகள் நாம் மேடையில் சந்தித்துக் கொண்டிருந்தாலும், அவற்றையெல்லாம் கணக்கிடாமல், இந்த மூன்றுமுறை என்று மட்டும் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், அந்த மூன்றுமுறைகள் மட்டுந்தாம் நானே உங்களைத் தேடிவந்து சந்தித்திருக்கின்றேன். அதுவும் மூன்று முகாமையான, தனிநலம் கருதாத செய்திகளுக்காகவே உங்களைச் சந்தித்திருக்கின்றேன் என்று உங்களுக்குத் தெரியும்.

ஒருமுறை, திரு ம.கோ.இரா. உங்களை விட்டுப் பிரிந்துபோய் தனிக்கட்சி ஏற்படுத்திக் கொண்டதற்காக நீங்கள் மிகவும் மனத்துயரம் கொண்டுள்ளதாகவும், அதனை ஆறுதல் படுத்தி மாற்ற வேண்டும் என்றும் என்னிடம் கடலூர் வந்து வேண்டிக்கொண்ட என் அருமை நண்பர் 'டார்பிடோ' சனார்த்தனம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்காக, சென்னை வந்து உங்களைச் சந்தித்து ஆறுதல் கூறிச் சென்றேன். அதை மறந்து இருக்க மாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

இரண்டாவது முறை தென்மொழி சென்னை வந்த பின்னர் மலேசியா அன்பர்கள் சிலர், தங்களையும் என்னையும் அங்கு அழைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன், தங்களிடம் நேரில் அழைப்பு விடுப்பதற்காக, என்னையும் வேண்டி அவர்களுடன் அழைத்து வந்தார்களே, அப்பொழுது. அந்த இரண்டாவது முறையும் நமக்குள் நடந்த உரையாடலை மறந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதுகின்றேன். ஏனெனில், அப்பொழுதுதான் நீங்கள் நெருக்கடி நிலையில் வீழ்த்தப்பட்டு, அடுத்து வரும் தேர்தலைச் சந்திக்க இருந்தீர்கள். அப்பொழுது கேட்டீர்கள், 'ஐயா, நாம் மீண்டும், அரசமைக்க வாய்ப்பிருக்கிறதா' என்று. உங்களுக்கு நினைவாற்றல் மிகுதியாக உள்ளதால் இக் கேள்வியை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதற்கு உங்களிடம் நான் சொன்னேன், 'நீங்கள் கிட்ட வைக்க வேண்டியவர்களை எட்டவும், எட்ட வைக்க வேண்டியவர்களைக் கிட்டவும் வைத்துக் கொண்டீர்கள். அதனால்தான் தோல்வியுற்றீர்கள். இந்தநிலை மாறும்பொழுது, ஒருவேளை நீங்கள் பதவிக்கு வரலாம்' என்று சொன்னேன். இதையும் மறந்திருக்க இயலாதென்று கருதுகின்றேன்.

இனி, மூன்றாம் முறையாக, நான் ஐரோப்பா புறப்படுவதற்கு ஓரிரண்டு நாள்களுக்கு முன்னர், திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தில்லியில் திருவாட்டி இந்திராவையும், திரு. பார்த்தசாரதியை

Scanned with CamScanner

யும் இறுதியாகச் சந்தித்துப் பேசிய பின். செய்தியாளர்களிடம், வேறு நல்ல முடிவு வருமானால், தாம் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விடுவதாகப் பேசியதை, வானொலியிலும் தொலைக் காட்சியிலும் கேட்டுவிட்டு, உங்களை அன்று இரவே பார்க்கத் துடித்து, நீங்கள் தஞ்சை சென்றிருந்ததால் மறுநாள் காலை நீங்கள் சென்னை திரும்பியபின், அரசு தோட்டத்தில் உள்ள உங்கள் கட்சி அலுவலகத்தில் சந்தித்து ஏறத்தாழ இரண்டு மணிநேரம் உரையாடி, ஐயா, அமிர்தலிங்கம் தமிழீழக் கோரிக்கையிலிருந்து பின் வாங்கி விடுவார் போல் தெரிகிறது; அவ்வாறு ஒரு நிலை வருமானாலும், நீங்கள், இதுவரை வெளிப்படுத்தி வந்த தமிழீழக் கோரிக்கையில் பின்வாங்கக் கூடாது. அதிலேயே வலிவாக இருக்க வேண்டும்; ஏனெனில் அதுதான் தமிழினத்திற்கு, அது மீண்டும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளக் கிடைத்த ஒரே பற்றுக் கோடு, என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டேனே, அஃது இறுதிமுறை. ஆனால். இந்தமுறையில் உங்களிடம் சற்று வெளிப்படையாகவே பேசினேன். அதுபோல், உங்களிடம், திருவாளர்கள். பேராசிரியர், சாதிக் பாட்சா, முரசொலி மாறன், இரகுமான்கான், பாலு இன்னும் அன்பர்கள் பலரையும் வைத்துக் கொண்டு இதுவரை எவருமே பேசியிருக்க முடியாதென்று கருதுகின்றேன். நானாக இல்லாமல், வேறு யாரேனும் அவ்வாறு வெளிப்படையாகப் - பேசியதற்கு என்று கூடச் சொல்ல முடியாது - எச்சரிக்கை செய்ததற்கு - என்னை, நம் தொண்டர்கள், தூக்கி வெளியே எறிந்திருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழலில் நான், தமிழீழத்தைப் பற்றியக் கருத்தைக் கூறிவிட்டு, நம் தமிழ்நாட்டு அரசியல், இன நிலைகளைக் குறிப்பிட்டுத் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நிலைகளைப் பற்றிக் கூறினேனே, அந்தக் கருத்துகளும் எச்சரிக்கைகளும் உங்களுக்கு மிக நன்றாக நினைவிலிருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் சொன்னேன் : "இந்த அரசியல் பதவி உங்களுக்கு அறவே வேண்டாம். அது தேவையில்லை, அதில் பழைய நிலையை நீங்கள் பெறவே முடியாது. எனவே அதில் காலத்தையும் முயற்சியையும் வீணடிக்க வேண்டாம்; பெரியாரைப் போல இனமுன்னேற்ற முயற்சிக்காக நேரில் மக்களிடம் வந்து விடுங்கள். தமிழ் இனம் முன்னேற, முன்னர் கைவிட்டதாக அறிவித்த தனித்தமிழ் நாட்டுக் கொள்கையை மீண்டும் கையிலெடுத்துக் கொண்டதாக வெளியறிவிப்புச் செய்து (பிரகடனப் படுத்தி) விடுங்கள்; அதுதான் உங்களுக்கும் நம் இனத்திற்கும் நல்லது; நலம் பயப்பது. அரசியலை அறவே விட்டு வெளியேறி வாருங்கள். நாங்களெல்லாம் உங்கள் பின்னேயிருந்து உழைக்கின்றோம்; தோள்கொடுத்து உதவுகின்றோம். உங்களுக்குப் போதும் இந்த அரசியல் வாழ்வு. இனி, நீங்கள் ஆளவேண்டும் என்று நினைக்காதீர்கள். நீங்கள் ஆண்ட இடத்தில்தானே அவர்கள் இருந்து ஆள்கிறார்கள்" - என்று, இதைவிட இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் வெளிப்படையாகவும், உணர்வாகவும், அறிவாகவும் பேசிய கருத்துகளை நீங்கள் இதற்குள் மறந்தே இருக்க

முடியாது. ஆனால், என் அன்புக்கும் மதிப்பிற்குமுள்ள கலைஞர் அவர்களே, இப்பொழுது என்ன நடந்தது? நான் சொன்னது நடந்ததா, இல்லையா? இப்பொழுதும், இறுதியாகவும், இதைத் தான் சொல்வதற்கு இம் மடலை, இன்னும் வெளிப்படையாக, எழுத விரும்புகின்றேன்

இம்மடலைத் தாங்கள் விருப்பமாகப் படிக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் உங்கள் தனிப்பட்ட ஒருவர் மேல் உள்ள பற்றினால் அன்று, தமிழின் மேலும், தமிழினத்தின் பேலும், தமிழ்நாட்டு விடுதலையிலும் நான்கொண்ட அசைக்க முடியாத, முன்னேற்றக் கொள்கையினால், இதைச் சொல்லியே ஆக வேண்டியிருக்கிறது. இம் மடல் உங்களை விட, உங்கள் கழகத்தைச் சேர்ந்த பலர்க்கும், மிகக் கடுமையான சினத்தையும், வெறுப்பையும் ஏன் எளனத்தையும் கூட, என்மேல் எழச்செய்யும் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால், நீங்கள் என்னை இதுவரை, மதித்ததே இல்லை. அஃது உங்கள் இயல்பு. என் அளவிடற்கரிய இன மீட்பு, தமிழ்மீட்புப் பணிகளுக்கு ஒரு துளியும் துணை நின்றதில்லை. இருப்பினும் நான் சொல்லியாக வேண்டியிருக்கின்றது. ‘செவி கைப்பச் சொல் பொறுக்கும் பண்புடைமை’ உங்களுக்குத் தான் நிறைய உண்டே! மேலும், ‘உற்றநோய் நீக்கி, உறு அமை முற்காக்கும்’ பெற்றியனாக என்னைக் கருதிக் கொள்ளவும் வேண்டுகின்றேன். எனவே, இங்குக் கூறப்பெறும் கருத்துகளை நீங்கள் நன்கு சிந்தித்து, இறுதியாக ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இதற்கு முன் தங்களுக்கெழுதிய இரண்டு மடல்களிலும் எழுதிய கருத்துகளையே, மீண்டும் மீண்டும் நினைவுறுத்திக் கூறுகின்றேன்.

தமிழ்இனம் என்பது ஒரு மக்கள் கூட்டமட்டுமன்று; அதனோடு வழி வழியாகப் புழக்கத்தில் வந்து, நீண்ட நெடுங்காலமாகப் பண்பட்டு வளர்ந்து நின்ற, பெறற்கரிய, உலக முதன் மொழியாகவும் அதன் தாய்மொழியாகவும் உள்ள நம் அருமைத் தமிழ், அதனொடு விளங்கி நின்ற பண்பாடு, அவற்றை நன்கு உருவாக்கி, அதற்கடிப்படையாக இருந்து கொண்டிருக்கும் அரிய இலக்கியங்கள், அவற்றுள் கூறப்பெறும் அரும்பெரும் வாழ்வியல், உளவியல், உலகியல் கருத்துகள், அவை நின்று வளர்ந்தோங்கி அவ் வினத்திற்கு வாழ்விடமாக இருக்கும் ஒரு நிலப்புலம் - இவை அனைத்தையும் உள்ளடக்கியதே இனம். இவ்வினம் இன்று உலகச் சூழலில் சிக்கிச் சிதைந்து, அழிவை நோக்கிப் போய்க் கொண்டுள்ளது, உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும்.

இவ்வினத்தை, இன்று வெறும் ஆரவாரமும், அழிப்புத்தனமும், விளம்பரமும், கொழுத்த பணப்புழக்கமும் கொண்ட அரசியலால் மீட்டெடுக்க முடியவே முடியாது. ஒரு பெரும் மக்கள் புரட்சியால் மட்டுமே அதை வரப்போகும் அழிவினின்று காத்து நிலைநிறுத்த முடியும். எனவே, நீங்கள் உங்களின் எஞ்சிநிற்கும்

வாழ்நாளையும், உள்ளத்தின் - அறிவின் - ஆற்றல்களையும் அதன் முன்னேற்றத்திற்கும் விடுவிப்பிற்கும் பயன்படுத்த வேண்டுமென்று, இறைஞ்சி வேண்டிக் கொள்கின்றேன்;

ஆம், இனி, அரசியல் பதவி உங்களுக்கு எதற்கு? அரசியலால் எதை விளைவிக்கப் போகிறீர்கள்? உங்கள் அரசியல் போராட்ட உணர்வை, முற்றும் இனநலப் போராட்டத்திற்கும், தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்திற்குமாக வெளியறிவிப்புச் செய்யுங்கள். (பிரகடனப் படுத்துங்கள்). உங்கள் கையிலுள்ள 'முரசொலி'யைப் போர் முழக்கமாக முழங்கச் செய்யுங்கள். இனி, நீங்கள், கட்டாயம் இழந்து போன அரசியல் பதவியை மீட்க முடியாது; மீட்கவே இயலாது. அஃது ஒரு மாயை! அஃது ஒரு சேற்றுக்குழி! அதனால், இப்பொழுதுள்ள கொடுமையான சூழலில், தமிழினத்திற்கு விடிவு காண முடியாது,

'தமிழினத்தானைத்தலைவன்' என்று உங்களைக்கூறி வரும் கூற்றை, இனியாவது மெய்ப்பிக்கப் பாடுபடுங்கள். எங்களுடன் களத்தில் இறங்குங்கள். நாங்கள் உங்களுக்குத் தோளொடு தோள்கொடுத்து உதவுகின்றோம். தமிழின விடுதலைப் போருக்குத் தலைமை தாங்குங்கள். அக்கால் உங்கள் மேலிருக்கும் அரசியல் காழ்ப்பெல்லாம், பகையெல்லாம் சுக்குநூறாகிப் போகும். உங்கள் முயற்சியில் தோல்வி ஏற்பட்டாலும், அஃது உங்களுக்கு வெற்றியே! தமிழக விடுதலைப் போர் தொடங்கப்பட வேண்டிய காலம் இதுவே! தோல்வியால் துவண்டு கிடக்கும் உங்கள் நெஞ்சாங்குலை, அதனால் விரிவடையும்; எழுச்சிபெறும். அஞ்சுதல் வேண்டா. சிறைக்குப் போக வேண்டியிருக்குமே என்று உள்ளம் செருக்க வேண்டா. நிமிர்ந்து நில்லுங்கள்; கூனிப் போயிருக்கும் இத் தமிழினத்திற்காக, உங்கள் எண்ணங்கள் உதவட்டும்! எழுத்துகள் போர்ப்பரணி பாடட்டும்! உங்கள் அரிய உழைப்பு நீராக வந்து பாயட்டும்! உலகத் தமிழின முன்னேற்றத்திற்காக முனைந்து நிற்கப் போகும் உங்கள் துணிவை வரலாறு பாராட்டும்! எம் போலும் எதிர்காலப் பாப்புலவர்கள் என்றும் புகழ்அழியாத புதுப் புறநானூற்றை உருவாக்கட்டும்!

நம்மை அடக்கியாளும் தில்லி அரசு வலுத்து வருகிறது. தேசியம் என்றும் ஒருமைப் பாடென்றும் பேசி, அது நம் இனிய தமிழ்மொழியையும், தமிழினத்தையும், இந்திமொழியிலும், ஆரிய இந்தியத் தேசியத்திலும் கரைந்துவிடப் பார்க்கிறது. இந்தநிலை, இப்பொழுதே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அல்லாக்கால், இனம், நம் ஒப்புயர்வற்ற தமிழினம், இனி, மெல்லமெல்ல, பாரதம் என்னும் நாடோடி ஆரியப் பண்பாட்டில், உருத்தெரியாமல் சிக்கிச் சிதைந்து போகும்! இஃதொரு பெரிய எச்சரிக்கைக் காலம். நாம் இன்று விழித்துக் கொள்ளவில்லையானால், வடநாட்டு ஆரியக் கசண்டர்களிடம் சிக்கிச் சீரழிந்து போவதுமெய்; மூப்பன்களும்,

பழனியாண்டிகளும், சிவாசி கணேசன்களும், தங்கள் பண நலத்தையும் பதவிநலத்தையும் காத்துக்கொள்ள, நம் தமிழ்மொழியையும், பண்பாட்டையும், இனத்தின் மேம்பட்ட வரலாற்றையும், காந்திக் குடும்பத்தாரிடம் காட்டிக்கொடுக்க, அடகுவைக்க, கொத்தடிமைப்படுத்த, உறுதிமுறி எழுதிக்கொடுக்க, இறுதிப் பட்டயம் அடித்துக் கொடுக்கத் துணிந்து விட்டார்கள்.

எனவே, உங்கள் கையிலுள்ள எழுது கோலைத்தமிழக விடுதலைப் பண் எழுதப் பயன்படுத்த வாருங்கள். உங்கள் நெஞ்சாங்குலையின் ஒவ்வொரு துடிப்பிலும், தமிழ்த் தேசிய விடுதலைப் பண்ணை இசைக்க விடுங்கள்! தனிப்பட்ட என் மேலுள்ள வெறுப்பை உமிழ்ந்து விடுங்கள்! என் செயல்கள் மேலுள்ள, பொறுத்துக் கொள்ளாத கசப்புணர்வை, வெறுத்து ஒதுக்கி விடுங்கள். நான் உங்கள் தோழன்! உங்கள் இனநல முயற்சிக்குத் துணை நிற்பவன். இப்படியொரு துணை,காலத்தால்,உங்கட்குக் கிடைப்பது அரிது. உங்கள் தமிழக விடுதலை முழக்கக் குரல் கேட்கின்ற, அதே நொடியில், நான் உங்களிடம் ஓடோடி வருவேன்; உங்கள் உணர்வோடு உணர்வாக ஒன்றி விடுவேன்! எனக்கு என் தனிமானம் பெரிதன்று; தமிழ்மானமும் தமிழ்நாட்டு மானமுமே பெரிது! பெரிது! நம் எதிர்கால இனவரலாற்றின் விடுதலை வெற்றி உங்களுக்கே ஆகட்டும்! வெல்க தமிழினம்! வாழ்க தமிழ்நாடு! விளங்குக தமிழ்மொழி உலகெலாம்! இஃது நான் உங்கட்கு எழுதும் இறுதிமடல்! இதற்கு ஓர் உறுதி வேண்டும்!

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

இங்ஙனம்

கருமம் செயக் கைதூவா நிற்கும் ஒருவன்



அன்பர்கள் கவனிக்க..

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5மணிக்கு மேல்,எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

— அமைச்சர்

ஆழ்ந்த கழிவிரங்கல்!

தொடக்க நாள் முதல் ஒரு சிறிதும் ஈடுபாடு குறையாத உறைத்த தென்மொழி அன்பரும், தூய தமிழ்த் தொண்டரும், எம் இனிய குடும்ப நண்பரும், அவ்வப்பொழுது நம் தொய்வில்லாத் தண்டமிழ்ப் பணிக்கும் இன் நலத் தொண்டுக்கும் தோன்றாத்துணையாகி நின்று, எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவுபவரும், அருங்கொடையாளரும், நம் தென்மொழியின் தொடர்ந்த நூல்கள் பல வருவதற்குக் காரணமானவரும், புன்செய்ப்புளியம்பட்டி, மறைமலையடிகள் மன்றச் செயலாளரும், அன்பும், பண்பும், தூய தொண்டுள்ளமும், நிறைந்த ஒழுக்கமும் சிறந்த வாழ்க்கை விழுப்பமும் கொண்டவருமாகிய புலவர் தமிழ்த்திரு. கா. இளமுருகனார் க. மு. அவர்களின் அரும் பெறல் தந்தையார், மு. காக்கனார் அவர்கள், கடந்த 22-12-84-ஆம் பக்கல், காரியன்று பிற்பகல் 2-30 மணியளவில், தம் இன்னுயிர் வாழ்வைத் துறந்து தூய்மையெய்தினார் என்னும் செய்தி, எமக்கும் எம் குடும்பத்தினர்க்கும் பெயரா இடர் தந்து பேரழுங்கல் விளைத்தது.

தந்தையாரைப் பிரிந்து, கையற்று நிற்கும் அவ் வீடில்லத் தமிழ்த்தலை மகற்கும், அவர் குடும்பத்தினர்க்கும், எம் ஆற்றொணாத் துயரைப் புலப்படுத்துவதுடன், எம் ஆழ்ந்த நெஞ்சளாவி நிற்கும் கழிவிரங்கலையும் கூறிக் கொள்கின்றோம். ஆன்றோர் குழுவிடைச் சான்றோனாக்கிய, அன்னார் தந்தையின் அருமையும் பெருமையும் அழியா நினைவாக நின்று நிலவுவதாகுக! அவர் புலம்பனும் பேராவியற்கைப் பேரொளியுள் அமைவுறுவதாகுக!

—பெருஞ்சித்திரனார்

செல்வி சுந்தரகாந்தம் நீடு வாழ்க!

நெடுநாளைய தென்மொழியன்பரும் தீவிரப்பகுத்தறிவாளரும், கலப்புத்திருமணம் செய்து தம் கொள்கைக்கே அரணாக நிற்பவரும் தமக்குக் குடும்ப நிலையில் அவ்வக்கால் துணை நிற்பவரும் சென்னையில் கூட்டுறவுத் துறையில் முது ஆய்வாளராகப் பணியாற்றுபவரும் ஆகிய திரு கலச இராமலிங்கம், வழக்கறிஞர் கோவி இராமலிங்கம் இணையரின் திருமகள் செல்வி சுந்தரகாந்தத்தைக் கடந்த 26.11.84 அன்று பள்ளியில் சேர்த்ததன் நறு நினைவாக, அதன் பெற்றோர் உருபா 25 ஐத் தென்மொழி வளர்ச்சிக்கென நல்கியுள்ளனர். அவர்களுக்கு உளங்கனிந்த நன்றியைக் கூறிக்கொள்வதுடன் செல்வி சுந்தரகாந்தம் நம்திருவாளர் நெ. து. சுந்தரவடிவேலனார் போல் கல்வியிலும் பொதுத்தொண்டிலும், அவரின் இனிய துணைவியார் மறைந்த திருவாட்டி காந்தம் அம்மையார் போல் அன்பிலும் பண்பிலும் சிறந்து விளங்கி, அவர்கள் இருவரையும் போல் மக்கட்குப் பயன் விளைக்கும் தொண்டிலும் ஈடுபட்டுப் பெயரும் புகழும், நலமும் வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ, நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

— ஆசிரியர்



நூலாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ருஅ

பாடுக புலவீர் பீடுடைப் பாவே!
ஏவா அரைசின் எண்ணியது துணியும்
காவலர் போறிர் நீவிர்! இற்புகுந்து
யாவர் தேடினிர் என்னலும்; அம்மையிர்!
மேவறு சின்மொழி கடிந்து தலைக்கூடி
மூவறு நாளா ஆவணந் துமிய
சூர்படு ஓதையும் எழுச்சியும் சூடுமா
ஊர்கொள் அமலை அறிந்திலிர் போலும்!
கலைபுகு கழகத்துப் புலைபுக,
சுவடிச் சிறுஅர் கவடியி னுட்ட
ஊணும் உறக்கமுந் துறந்து; பகலிரவாக்
காவற் படுப்பதுங் காண்கிலிர் போலும்!
இவ்வே மறுகின் எழுந்த கூட்டத்து
எம்மோன் ஒருவன் முன்பல் தெறித்துக்
குருதி பிதிரக் கூர்ங்கல் எற்றிக்
கடிதின் நுழைந்தோர் செங்கண் விடலை,நும்
இற்புறத்துக் கரந்தா னாக அவனைக்
கைப்படத் தொடர்ந்தேம் காட்டுதிர் என்ன;அம்
முதியோள் நடுக்குற வெழுந்து,
முன்றிலும் அகத்தும் மடையினுங் காட்டி
ஒன்று மறிகிலே மென்ரு ளாக;
வந்தோர் மனம்பெறக் கழிய, உட்புகுந்து
நென்னிறை குரம்பை ஒளியவுள் ளிறக்கிய
புன்றலைச் சிறுவனை அகவிப் புறந்தூக்கி
அன்னைத் தமிழ்க்கே அவலங் கடிந்தோய்
நின்னை மகனுப் பெற்றிலேன் பதடியென
இளந்தலை முகர்ந்து குருந்துதோள் நீவி
வெல்க தமிழென விறல்பெற முழக்கி
மல்கு நீர்விழி மறைப்பச்
செல்கென விடுத்த சீர்மை நினைந்தே!

பொழிப்புரை : பாடுவீராக, புலவரீர் பெருமிதம் தோன்றும் படியாக (இதுபோலும்) பாட்டினை. இது செய்க என்று கட்டளையிடார் (எனினும்), அரசினரின் எண்ணம் இதுதான் என்று

தெரிந்து செய்யத் துணிந்துவிடுகின்ற காவலர்கள் போலும், (இருக்கின்றீர்கள்) நீங்கள். (என்) வீட்டிற்குள்ளே (கேளாது) புகுந்து, யாரைத் தேடுகின்றீர்கள், என்று கேட்டதும், (அதற்கு அக் காவலர்கள்), 'அம்மையீர், (தமிழ்நாட்டின் கண் வந்து) பரவுகின்ற சிறுமொழி(யாகிய இந்தி)யை, (அவ்வாறு பரப்புதலை விரும்பாமல்) கண்டித்து, ஒன்றுகூடி, கடந்த பதினெட்டு நாள்களாகக், கடைத்தெருக்கள் தூளிபடவும், அச்சங்கொள்ளும் (படி நடக்கும்)ஆரவாரங்களும், போராட்டங்களும், (அதன் விளைவாகக் காவலர்தம்) துமுக்கிச் சூடுகளும்—இவ்வாறாக ஊரே அமர்க்களப் படும் நிலைகளை நீங்கள் அறியமாட்டீராகள்போல் தெரிகிறது.'

'(எனவே,) கல்விபயிலும் இடங்களிலெல்லாம், புன்மையான செயல்கள் புகுந்தவாறு, நூல்களை எடுத்துச் சென்று பயில வேண்டிய மாணவர்கள், எங்களைக் கவடி விளையாடுகின்றவர்களைப் போலும் ஆட்டங்காட்டுகின்றனராக, அதனால், யாங்கள் உண்ணும் உணவையும், உறக்கத்தையும் அறவே கைவிட்டவராகப், பகலும் இரவும் (கண் விழித்துக்). காவல் செய்ய வேண்டியுள்ளதையும், தாங்கள் காணவில்லைபோல் இருக்கிறது.'

'இப் பக்கத்துத் தெருவில் எழுச்சிகொண்ட கூட்டத்தின் (ஆரவாரத்தில்), எம் காவலன் ஒருவனை முன்பல் தெறித்துவிழவும், அதனால குருதி பீறிடவும், ஒரு கூரிய கல்லை எடுத்து வீசிவிட்டு, விரைந்து (ஓடிவந்து) இப்புறம் நுழைந்த, சிவந்த கண்களை உடைய ஓர் இளந்தையன், உங்கள் வீட்டின் உட்புறமாக ஒளிந்து கொண்டானாக, அவனைப் பிடிப்பதற்காக நாங்கள் வந்துள்ளோம்; (அவன் எங்கே இருக்கிறான்) என்று காட்டுங்கள்' — என்னவும்;

அம் முதியவள், உடல் நடுக்கத்துடன் எழுந்து, வீட்டின் முன்பகுதியிலும், உள்புறத்தும், (பின்னுள்ள) சமையற்கட்டிலும், (அவர்களை அழைத்துச் சென்று, அவன் இல்லாததைக் காட்டி), 'எங்கே போயிருப்பான் என்று ஒன்றும் கண்டுபிடிக்கக் கூடவில்லையே' என்று கூறினளாக. அதனால், வந்திருந்த காவலர், மனம் நிறைவுற்றுச் செல்லலும், (அதன் பின்னை அவள்) வீட்டிற்கு உள்ளாகச் சென்று, நெல்லை நிறைத்து வைக்கும் குரம்பையின் உள்ளே ஒளியச் செய்வதற்காக இறக்கிவிட்ட, புல்லிய மென் தலையினை உடைய சிறுவனைக் கூவி அழைத்து வெள்ளியே தூக்கிக் கொணர்ந்து, தமிழன்னைக்கு வந்த துயரத்தைக் கடிந்து நின்றோயே! நின்னை(யான்) மகனாப் பெறாத பதடியாகினேனே' என்று கூறி அவனது இளந்தலையினை முகர்ந்து மூங்கில் போலும் இளந்தோளை நீவிக்கொடுத்துத், 'தமிழ்வெல்க' என வீறுணர்வுடன் முழக்கி, மண்டுகின்ற நீர் கண்களை மறைக்கும்படி, 'நீ சென்று விடு' என்று விடுத்த சிறந்த செயலை எண்ணியே!

விரிப்பு : இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

கடந்த 1965-ஆம் ஆண்டு தொடங்கி நடந்த இந்திப் போராட்டக் காலத்தில், நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியாகக் கற்பனை செய்த பாடலிது.

Scanned with CamScanner

போராட்டத்தில் ஈடுபட்டுக் காவலர் மேல் கல்லெறிந்த இளந்தையன் ஒருவன், காவலரால துரத்தி வரப்படுங்காலை, ஆங்குள்ள இல்லமொன்றினுள்ளே ஓடிப்புகுந்தானை, முதியோள் ஒருத்தி நெற்குரம்பையினுள்ளே ஒளித்து வைத்துக் காத்து, அக் காவலர் வெளியேறிய பின்னை, வெளியில் விடுத்துப் போற்றிய சீர்மையைப் பாராட்டியது.

'மல்கு நீர்விழி மறைப்பச், செல்கென விடுத்த சீர்மை நினைந்தே, பாடுக புலவீர் பீடுடைப்பாவே!' என இறுவாய்த் தொடையாக இணைத்துக் காட்டுக.

பாடுக புலவீர் பீடுடைப் பாவே! பாடுங்கள் புலவர்களே! (இத்தகைய) பெருமை மிகு பாடல்களையே!

புலவர்கள் இக்கால் பாடுபொருளாக, வீணான வெறுஞ் செயல்களை, வெற்றுச் சொற்களால், கற்பனை நயமும் வளமும் இன்றி. வெறிதாகப் பாடித் தம் புலமைத் திறனைப் புழுதியில் இறைக்கும் புல்லிய செயல்களைத் தவிர்த்து, இத்தகைய அச்சமும் நகையும், வீரமும் வெகுளியும், வியப்பும் உவகையும், அன்பும் அமைதியும் பொலிந்த, இலக்கிய நயஞ்செறிந்த பாக்களையே மக்கள் மனங் கொள்ளவும் நனைந்துளும்பவும் பாடி மகிழ்தலும் மகிழ்வித்தலும் வேண்டும் என்னும் வேண்டுகையாகப் பாடியதாம் இப் பாடல். என்னை?

'ஏவா அரைசின் எண்ணியது துணியும், காவலர் வரவும்' 'சூர்படு ஓதையும் எழுச்சியும் சூடுமா, ஊர்கொள் அமலையும்' என்பதில், — அச்சமும்;

'சுவடிசி சிறூஅர் சுவடியின் ஆட்ட, ஊணும் உறக்கமும் துறந்து, பகலிரவாக் காவற்படுப்பதும்' என்பதில் நகையும்;

'எம்மோன் ஒருவன் முன்பல் தெறித்துக் குருதி பிதிரக் கூர்ங்கல் எற்றிக் கடிதின் நுழைந்தோர் செங்கண் விடலை, நும் இற்புரத்துக் கரந்தானுக'— என்பதில் வீரமும்;

'அவனைக் கைப்படத் தொடர்ந்தோம்; காட்டுதிர்'— என்பதில் வெகுளியும்;

'வந்தோர் மனம்பெறக் கழிய, உட்புகுந்து, நென்னிறை குரம்பை ஒளிய உள்ளிறக்கிய புன்றலைச் சிறுவனை அகவிப் புறந்தூக்கி'— என்பதில் வியப்பும், உவகையும்;

'அன்னைத் தமிழ்க்கே அவலங் கடிந்தோய், நின்னை மகனுப் பெற்றிலேன் பதடியென, இளந்தலை முகர்ந்து குருந்து தோள் நீவி'— என்பதில் அன்பும்;

'மல்கு நீர்விழி மறைப்பச் செல்கென விடுத்த சீர்மை நினைந்தே'—என்பதில் அமைதியும்;

— இணைந்து வந்து, எண்மைச் சுவையையும் இப்பாடல் வெளிக்கொணர்வதை ஓர்ந்து உணர்ந்து மகிழ்க.

Scanned with CamScanner

— இனி, இத்தகைய சுவை நலங்கொழிக்கும் பாடல்களைப் பாடுவீர்களாக என்பதுடன், வீர இளையோனைக் காவலர் கையகப் படுத்தாமல், கரந்து வைத்து வாழ்த்தி வழியனுப்பிய முதியோளின் சீர்மையை எம்மைப்போலும் நீவிரும் பாடுக என்பதாகவும் பொருள் கொண்டு போற்றுக, என்பதுமாம்.

ஏவா அரைசின்............ காவலர் : கட்டளையிடாமலேயே அரசினரின் நோக்கும் போக்கும் உணர்ந்து, அதைச் செயலாக்கத் துணிந்து நிற்கும் காவலர் என்க

காவலர் போறிர் : காவலர் போல்வீர் என்பது, வகரங்கெட்டு, இடையினம் வலிந்து, நெடில் குறுகிற்று.

போல்தல்—போலல்—போறல் (தொல்-பொருள் - கள - கா - 3)
போல்வீர்—போலீர்—போறீர் (கலி-9-11; அகம் 29-12).

இற்புகுந்து...............என்னலும் : எம் இல்லுள்ளே (கேளாது) புகுந்து, யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டலும்.

மேவுறு சின்மொழி : மேவுதலுறும் சிறிய மொழியாகிய இந்தி, சிறிய மொழி என்றது, வளமின்மையும், பரப்பின்மையும், செப்பமின்மையும், சிறப்பின்மையும் கருதி என்க.

கடிந்து: கண்டித்து; தலைக்கூடி ஒன்றுகூடி.

மூவறு நாளா : பதினெட்டு நாள்களாக.

ஆவணம் துமிய : கடைத்தெரு தூளிபட.

சூர்படு ஒதை : அச்சம் கொள்ளும்படியான போராட்ட ஆரவாரம். ஒதை—ஓசை யென்னுஞ்சொல் திரிந்து பேரோசையைக் குறித்தது.

சூடு—துமுக்கிச் சூடு. அமலை: அமர்க்களப்படும் நிலை.

கலை புகு கழகம் : பள்ளிகளும் கல்லூரிகளும்.

புலை புக : புல்லிய செயல்கள் புக. கல்விக்குத் தேவையற்ற போராட்டம் முதலிய ஆரவாரச் செயல்கள்.

சுவடிச் சிறாஅர் : மாணவர்கள்.

கவடி : இரண்டு அணியினர் போராடும் ஒரு விளையாட்டு. மாணவர்கள் காவலர்களை எதிரணியினராகக் கருதி கவடியாட்டத்தில் விளையாடுவதுபோல் ஆட்டங்காட்டினர் என்பது.

காவற் படுப்பது : காவல் காப்பது.

இவ்வே—இவ்விடத்தே. மறுகு: தெரு.

எம்மோன் ஒருவன் : எம் போலும் ஒரு காவலன்.

பிதிர : வெளிப்பட,

செங்கண் விடலை : போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டதாலும், சினந்து எழுச்சி கொண்டதாலும் கண்கள் சிவந்துகாணப்பட்ட இளந்தையன் இளந்தைப் பருவம் — பிள்ளைமைக்கும் இளைமைக்கும் இடைப்பட்ட பருவநிலை.

இற்புறத்து : வீட்டின் பக்கல்.

கரந்தானாக : மறைந்தான் ஆக.

கைப்படத் தொடர்ந்தேம் : கைப்பிடிக்கத் தொடர்ந்து வந்தேம்.

காட்டுதிர் : அவன் ஒளிந்துள்ள இடத்தைக் காட்டுங்கள்.

நடுக்குற வெழுந்து : முதுமையால் உடல் நடுங்கியவாறு எழுந்து.

முன்றில் — வீட்டின் முன்புறம், அகம் வீட்டின் உட்புறம்; மடையினும் — சமையற்கட்டு உள்ள, வீட்டின் பின்புறம்.

மனம் பெறக் கழிய : மனம் நிறைவுற்ற, வெளியே செல்ல.

நென்னிறை குரம்பை : நெல் கொட்டிவைக்க உதவும் சிறிய தொம்பை; பெரிய குதிர்.

புன்றலைச் சிறுவன் : இளந்தலையை உடைய பள்ளிச் சிறுவன்.

அகவி : கூவி அழைத்து.

பதடி : பதர் போன்றவள்.

அவன் போலும் போராட்ட உணர்வுடைய ஒரு வீரமகனைப் பெற்றிலாததால், தன்னைப் பதடி என்று கூறிக்கொண்டாள் என்க.

குருந்து தோள் : இளம் மூங்கிலைப் போலும் மென்மையான தோள்.

விறல் பெற : வீறுணர்வு பெறும்படி.

மல்கு நீர் விழி மறைப்ப : மல்குகின்ற கண்ணீர் விழிகளை மறைக்கும்படி.

செல்கென விடுத்த சீர்மை நினைந்தே : நீ சென்றுவிடுக என்று விடுத்த சிறந்த செயலை எண்ணியே; (பாடுக புலவர் பீடுடைப் பாவே என்று புணர்த்துக.)

கடந்த 1965-ஆம் ஆண்டு நடந்த இந்திப் போராட்டத்தைப் பற்றியெழுந்த பாடல்களில் இதுவும் ஒன்று.

முந்தைய பாடல்களில் முழு வரலாற்றையும் கண்டுகொள்க.

இளம் உள்ளம் ஒன்றின் தாய்மொழிப்பற்றையும், அவர்களை வேட்டையாடிய காவலர்களின் கொடுமையையும், அவர்களை ஆட்டிவைத்த அரசினர்தம் அச்சுறுத்தும் தன்மையையும், போராட்டம் நடந்த காலத்து, அதில் ஈடுபட்டாருக்குப் பொது மக்கள் துணையாயிருந்து, காத்தொழுகிய சீர்மையையும் வெளிப் படுத்தி உரைப்பதாகும் இப் பாடல்.

இப் பாடல் முன்னது திணையும், செந்தமிழ்ச் சீர்மை என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன. 0

Scanned with CamScanner

அனைத்துலக வரலாற்றில் பெண்களின்
விடுதலைப் போராட்ட ஈடுபாடு!

பாலஸ்தீனப் போராட்டத்தில் பெண்களின் பங்கு!

மாநிதகுல வரலாற்றில், இந்நிறைக்காலம் வரையுள்ள குமுகாயத்தின் செயற்பாடுகள் பெண்களை அடிமை நிலைக்கே இட்டுச் சென்று இருக்கின்றன. இக் குமுகாயத்தில் ஆண்களின் செயற்பாடுகள் கருத்துகள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றனவே அன்றி பெண்களின் கருத்துகளும், செயற்பாடுகளும் மூடி மறைக்கப்பட்டு வெளிப்படுத்தப்படாமலே இருந்து வருகின்றன. இந் நிலைப் பாட்டினால், பெரும்பாலும் உலக வரலாறுகளில் பெண்களின் பங்களிப்பே இல்லையோ என ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. ஆனால், இந் நூற்றாண்டில் உள்ள விடுதலை இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பானது, வரலாற்று நூல்களில் இதுவரை ஈடுசெய்ய முடியாத அளவு மிகப் பெரியதாயிருக்கின்றது.

இன்று 'தமிழீழம்' கேட்டுப் போராடி வருகின்ற விடுதலை இயக்கங்களில், ஆண்களுடன் சரிநிகராகத் தோளோடு தோள் நின்று போர்புரியும் பெண்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது தேவை. அதிலும் புரட்சியாளர்களுக்கே உந்து ஆற்றலாக விளங்கும் பாலத்தீன விடுதலை இயக்கமும், அதில் பெண்கள் இடம்பெறும் முகாமைப் பங்கும் குறிப்பிடப்பட வேண்டியது மிகவும் தேவையாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியர் பாலத்தீனத்தைத் தங்கள் குடியேற்ற ஆளுமைக்குள் உட்படுத்தியமையும், 'பால்போர்' வெளிப்படுத்தத்தின் மூலம் யூத நாட்டை உருவாக்க உறுதியளித்தமையும், இச் செயற்பாடுகளினால் பாலத்தீன மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளையும், 'சியோனிசக் கருத்தாளர்கள்' பாலத்தீன மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடித்து நாட்டை விட்டு அகற்றியதும் யாவரும் அறிந்தவையே!

பாலத்தீன மக்களைக் கலைத்து முற்றாக அழிக்கும் நோக்குடன் 'சியோனிச' நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, 1917-ஆம் ஆண்டுவரை தேச அளவிலான போராட்டங்கள் நடந்த காலத்திலிருந்தே பெண்கள் போராட்டங்களில் பங்கு பெற்று வந்திருக்கின்றனர்.

முதன் முதலில் 1920 ஆம் ஆண்டளவில் பாலத்தீனப் பெண்கள் தங்களது தேச விடுதலைப் போராட்டத்தில் முற்றும் முழுதாகப்பங்குபற்றத்தொடங்கினர். பிரித்தானியரின் குடியேற்ற ஆளுமையையும், யூதர்களின் 'சியோனிச' நடவடிக்கைகளையும் எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் கருத்துப் பரப்புப் பணிகளிலும் ஆண்களோடு சரிநிகராகத் தமது பங்களிப்பை வழங்கி

வந்தனர். தொடக்கத்தில் இவர்களின் போராட்டங்கள் தம் விருப்பப்படி எழுந்ததாகவும், ஓர் ஒழுங்கு முறையற்றதாகவும் காணப்பட்டன.

1921-ஆம் ஆண்டளவில் பெருமளவு பெண்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் மீலியா சாகாகினி (Melia Sakakani), சுலேய்கா சிகாபி (Suleika Shihabi) ஆகிய இரு முன்னோடிப்பெண் போராளிகளினால் 'பாலத்தீனப் பெண்கள் கழகம்' '(Palestinian Womens' Union) என்னும் அமைப்பு உருவாக்கப்பெற்றது. உழவுத் தொழில் செய்யும் பெண்களை இவர்கள் கவரமுடியாத தன்மையினால் தொடக்கத்தில் இவர்களின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

1929-ஆம் ஆண்டு செருசலம் நகரில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் 300 பெண்களுக்குமேல் குவிந்து 'வால்போர்' (Balfour) வெளிப்படுத்தத்தை விலக்கிக் கொள்ளக் கோரியும், யூதக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கோரியும், பிரித்தானிய தூதுவரக அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதே ஆண்டு செருசல நகரில் 'நிமாற்-அல்-அலாமி' (Nimat al-Alami) என்ற பெண் போராளி தலைமையில் பாலத்தீன அரபுப் பெண்கள் கழகம் உருவாக்கப்பெற்றது.

தொடர்ந்த ஆண்டுகளில் இப் பெண்கள் கழகக் கிளைகள் பாலத்தீனம் முழுவதும், நகரங்கள், ஊர்ப்புறங்கள் தோறும் உருவாக்கப்பெற்றன. விடுதலைப்போராளிகளின் குடும்பங்களுக்கும், ஏதிலிகளுக்கும் குமுக நல உதவி (சமூக சேவை) செய்து அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதையே இக் கழகம் முதாமையான நோக்கமாகக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் அரசியல் வேலைகளையும் இக் கழகம் மேற்கொண்டது. இக் கழகத்தைச் சேர்ந்த பெண்கள் மக்கள் நடுவில் அரசியல் வகுப்புகளையும் போராட்டம் பற்றியக் கருத்து விளக்கங்களையும் அளித்து வந்தார்கள். பாலத்தீனப் பெண்கள் கழகத் தலைமைச் செயலகமான JAFFO-இல் துணிவும், புதிய முயற்சிகளில் ஈடுபட ஆர்வமும் உள்ள 'நதீரா கடாட்' (Nathira Haddad) என்ற பெண் இருந்தார். இவர் 'பெய்சால்' (Feisal) என்னும் அரசனிடம் சென்று பாலத்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தேடினார்.

தொடக்கத்தில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெண்களே கூடுதலாக இக்கழகத்தில் பங்கு பெற்றனர். 1936-ஆம் ஆண்டு பாலத்தீனத்தில் நடந்த பொது வேலைநிறுத்தம் வரை கீழ்மட்ட வகுப்பைச் சேர்ந்த குறைந்த கல்வியுடைய எந்த ஒரு பெண்ணும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறவில்லை. வேலை நிறுத்தத்தின் முதலாவது மாத முடிவில் செருசலத்தில் நடந்த கூட்டத்தில் கிட்டத்தட்ட 600 பெண்கள் கலந்து கொண்டு பாலத்தீனியர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்வரை வேலைநிறுத்தப் போராட்

டம் தொடர்வதென்றும், யூதக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், தேசிய அரசு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

சண்டைக்காலங்களில் பெண்கள் ஒன்றிணைந்து எதிர்ப் போராட்டங்கள் நடத்துவதிலும் கருத்துப் பரப்புப் பணி புரிவதிலும் ஈடுபட்டு வந்தனர். பாலத்தீன விடுதலைப் போராளிகளுக்கும் பிரித்தானிய—சியோனிசப் படைகளுக்கும் இடையே சண்டை நடைபெற்ற காலகட்டங்களில் போராளிகளுக்கு உணவும் நீரும் அளித்து, கருவிகள் வாங்குவதற்குப் பணம் தண்டியும், காயம் பட்டவர்களுக்கும், ஏதிலிகளுக்கும் மறுவாழ்வளிப்பதிலும் இக் கழக உறுப்பினர்கள் ஈடுபட்டனர். எளிய—பொதுவான உழவர் பெண்கள் எவ்வாறு தங்கள் காய்கறிக் கூடைகளுக்குள் கருவிகளை மறைத்துக் கொண்டு சென்று மலைகளிலுள்ள போராளிகளுக்கு அளித்தனர் என்பது பற்றியும், பாலத்தீனப் பெண்களின் தனிப் பட்ட வீரச் செயல்கள் பற்றியும் பல கதைகள் உண்டு.

1948-ஆம் ஆண்டளவில் பெண்கள் பெருமளவில் தமது தாய்நாட்டைக் காப்பதற்காகப் போராட்டத்தில் குதித்தனர். அத்தோடு 1947-ஆம் ஆண்டு பெண்களுக்கான ஓர் அமைப்பு 'சக்ராற்—அல்-உக்குவான் ('zohrat-al-Uqhuwan) தொடங்கப் பெற்றது. இந்த அமைப்பானது 1948-இல் நடைபெற்ற அரபு-இசுரேல் சண்டையின்போது மக்களுக்கு உணவு, மருத்துவம், கருவி உதவிகள் அளிப்பதிலும், அகழிகள் வெட்டுவதிலும், தடை அரண்களை ஏற்படுத்துவதிலும் முகாமைப் பங்கேற்று வந்துள்ளது,

பாலத்தீன நகரங்களில் வேறு சில அமைப்புகள் 'நப்லுசி (Nablues) போன்ற அமைப்புகள் பெண்களை படைத்துறை உடையில் கருவிப் போராட்டத்தில் சிரியப்படையுடன் சேர்ந்து இசுரேலியர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தின. 1948-இல் நடந்த அழிவின்போது பல தனிப்பட்ட பெண்கள் நடத்திய வீரச் செயல்களும் நிகழ்ந்ததுண்டு. தன் கணவனும், மகனும் சியோனிசவாதிகளால் கண் முன்னல் கொலை செய்யப் பட்டதைக் கண்ட 'Huauo Zaydon' என்ற குடியானவப் பெண் ஒருத்தி சினம் மிகுந்து ஒரு 'துமுக்கியை'ப் (Riffle) பறித்துத் திருப்பிச் சுட்டாள். 'Jenin' என்ற இடத்திற்கு அருகிலிருந்த ஊர்ப்புறம் ஒன்றில் குடியானவப் பெண் ஒருத்தி வேறு கருவிகள் கிடைக்காததால் கோடரி ஒன்றினுல் சியோனிசப் படை வீரன் ஒருவனைக் கொன்றொழித்தாள்.

பாலத்தீனியர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நல் வாழ்வு (சுகாதாரம்), கல்வி, வீட்டு வாய்ப்பு (வசதி) போன்றவற் றில் காட்டப்பட்ட பாகுபாடுகள் பாலத்தீனப் பெண்களைப் பெரு மளவில் தாக்கியது. கடுமையான பொருளியல் சூழ்நிலைகள், உயரும் விலைமாற்றங்களுக்குச் சிறிதளவே உயர்ந்த கூலி மாற்றம் பாலத்தீனப் 'பெண்களைத் தொழிற்சாலைகளிலும், பண்ணைகளி லும் கூலி வேலை செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. கூலி

Scanned with CamScanner

வேலை செய்யும் இடங்களில் பாலத்தீனப் பெண்கள் அரபுகள் என்ற வகையிலும், பெண்கள் என்ற முறையிலும் ஒடுக்கப்பட்டு வந்தனர். ஆகவே, இசுரேலியப் பொருளியல் பெருமளவு பாலத்தீனத் தொழிலாளர்களின் கூலியில் சுரண்டலை ஏற்படுத்துவதன் மூலமே பின் தங்கியிருந்தது.

1950-60-ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நாடு கடத்தப்பட்ட பாலத்தீனியர்களினதும், ஏதிலிகள் முகாமில் இருந்தவர்களினதும் சிக்கல் பெரிய சிக்கலாக இருந்து வந்தது. பாலத்தீனத்திற்கு வெளியே பல பெண்கள் அமைப்புகள் இச் சிக்கல்களை எதிர் கொள்வதற்காக உருவாக்கப்பெற்றன. இவ்வமைப்புகள் முகாமை யாகக் கிழக்கு செருசலம், சோர்டான், லெபனுன், சிரி போன்ற நாடுகளில் அமைக்கப்பெற்றன. அ ர சி ய ல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏற்கனவே இயங்கிவந்த 'பாத்கட்சி' (Baath Party) 'அரபு தேசிய இயக்கம் (Arab-Natonalist Movement) போன்ற வற்றில் பல பெண்கள் இணைந்து செயல்படத் தொடங்கினர். மேலும், 'லைலா காலிட்' என்ற அமைப்பொன்றில் சேர்ந்து தொடர்ச்சியான வானூர்தி(விமான)க் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

1948-ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டையைத் தொடர்ந்து பாலத்தீன பக்கள் அரபு நாடுகள் தமக்கு உதவிடளிக்கும் என்ற மாயையிலிருந்து விடுபட்டனர். அரபு நாடுகள் செய்வது குறை வாகவும், சொல்வது பெரிதளவாகவும் உள்ள நிலையை உணர்ந் தனர். அரபு நாடுகளுடன் சேர்ந்து நடத்திய நீண்டகாலப் போராட்டத்தைத் தொடர்ந்து 1964-இல் பாலத்தீனியர்கள் தங்களுக்குத் தனியான அமைப்பு—'பாலத்தீன விடுதலை இயக் கத்தைத்' தொடங்கினர். தொடரும்

— நன்றி. 'விடியல்' அக்தோபர்' 84

“தென்மொழி”

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

Scanned with CamScanner

தமிழீழத்தை அமைக்க அனைத்துத் தேசத்திட்டம் தடையாக இருக்கிறதா?

— மலர்மாறன்.

தமிழ், தமிழர் என்றால் என்ன? எங்கெங்கெல்லாம் வாழ்பவர் தமிழர்கள்? அவர்களின் சொந்த நாடு எது? இந்தக்கேள்விகளுக்கு ஆக்சுபோர்டு அகரமுதலியைப் புரட்டினால் நமக்கு விடை கிடைக்கிறது.

நாம் ஆக்சுபோர்ட் அகரமுதலியைப் புரட்டுகிறோம்.

'Tamil (n) = Language, Member of a race inhabiting South India and Ceylon, Hence Tamilian (a native)'

'தமிழ் என்றால் ஒரு மொழி; தென்னிந்தியாவிலும், சிலோனிலும் வாழும் ஓர் இனம்; தமிழர்கள்'

(சிலோன் என்பதுதான், இலங்கை, ஈழம், சிரிலங்கா என்று அழைக்கப்படுகின்றது)

ஆக்சுபோர்டு அகரமுதலி கூறும் பொருள் இதுதான்.

ஆக்சுபோர்டு அகரமுதலி என்பது தமிழர்களால் எழுதப்பட்டது அன்று. ஆங்கில நாட்டு அரசாலும் எழுதப்பட்டது அன்று. பொய்யும் புரட்டும் கூறிக்கொண்டு திரியும் எந்த அரசியல் கட்சியாலும் எழுதப்பட்டது அன்று.

அறிவாளிகளால் எழுதப்பட்டது—உண்மையே கூறும் அறிவு சான்ற அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்டது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட அந்த ஆக்சுபோர்டு அகரமுதலி கூறுகின்றது, சிலோனிலும், தென்னிந்தியாவிலும் வாழுபவர்கள் தமிழர்கள் என்று.

சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற பல நாடுகளில் தமிழர்கள் வாழுகின்றனர். ஆனால் அவையெல்லாம் தமிழர்களின் நாடுகள் என்று கூறப்படவில்லை. சிலோனும் தென்னிந்தியாவுந்தாம் தமிழர்களின் நாடுகள் என்று குறிப்படப்பட்டுள்ளன.

சிலோனும், தமிழகமுந்தாம் தமிழர்களின் தாய் நாடுகள்—மற்றவை தமிழர்கள் குடியேறிய நாடுகள்' என்பதை இதிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் நாம் வாழுகின்றோம்—தமிழ் ஈழநாடு கேட்டுக் கொண்டிருக்கும் நமது உடன்பிறப்பாளர்கள் சிலோனிலே வாழுகின்றார்கள்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே-வரலாற்றுக் காலம் தொடங்கும் முன்பிலிருந்தே, தமிழர்கள் இலங்கையிலே வாழுகிறார்கள். தமிழ் மன்னர்கள அங்கே ஆட்சி செய்து கொண்டிருந்திருக்கின்றார்கள். அவர்கள் முற்பழந் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களின் மக்கள் தொகை ஏறத்தாழ 25 இலக்கமாக உள்ளது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் வெள்ளைக்காரன் இந்தியாவைப் பிடித்து ஆட்சி செய்தான் சிலோனையும் தனது குடியமைப்பு ஆளுமையில் வைத்திருந்தான்.

அந்தச் சமயத்தில் சிலோனில் உள்ள மலைக்காடுகளை அழித்துத் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க ஆட்கள் தேவைப்பட்டனர். அந்தப் பணிகளுக்காக இந்தியாவிலிருந்து தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள்தாம் மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களின் மக்கள் தொகை ஏறத்தாழ 10 இலக்கமாக உள்ளது.

சிங்களவர்களுக்குத் தமிழர்கள் அடிமை ஆகும் நிலை எப்போது ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது?

வெள்ளைக்காரன் 1947-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு உரிமை வழங்கினான். அதற்கு ஓர் ஆண்டிற்குப் பின்னால் 1948-ஆம் ஆண்டு சிலோனிற்கு உரிமை கொடுத்தான்.

ஆகவே ஏறத்தாழ 36 ஆண்டுகளாகத்தான் ஈழத் தமிழர்கள், சிங்களவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றனர். பெரும்பான்மையினமாக இருப்பதால் சிங்களவர்களின் கைக்கு ஆட்சிப் பொறுப்புப் போய்விட்டது.

சிங்களவர்களுக்குத் தமிழர்கள் அடிமைகள் ஆகும் நிலை கடந்த 36 ஆண்டுகளாகத்தாம் ஏற்பட்டிருக்கின்றன.

இலங்கையில் சில பகுதிகளில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழுகிறார்கள். யாழ்ப்பாணம், திரிகோணமலை போன்ற வேறு சில பகுதிகளில் ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகிறார்கள்.

வெள்ளையர்கள் இலங்கைக்கு உரிமை கொடுக்கும் போதே தங்களுக்கு, தமிழ் ஈழ நாடு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டிருந்தால் — இந்தியாவில் முசுலீம்கள், பாக்கித்தான் கேட்டதுபோல், உறுதியாகக் கேட்டிருந்தால்—அப்போதே தமிழ் ஈழ நாடு தனியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும்.

(தொடர்ச்சி 29-ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைக் காலம்!

— வள்ளி கேள்வன்

மலர்ந்தது உலகத் தமிழினை முன்னேற்
    றக்கழ கம்மலர்ந் ததுதான்!
வளர்ந்தது பழமைத் தமிழினத் தோர்கள்
    வளம்பெறச் செழித்திட வேண்டும்
கிளர்ந்திட வேண்டும் தாய்த்தமிழ் உணர்வு
    கேண்மையாய் தமிழின மாந்தர்
எழுந்திட வேண்டும் தனித்தமிழ் நாடு,
    இங்குநாம் அமைப்பதற்காக 1

செந்தமிழ் உணர்ச்சி செறிந்திடுந் தமிழர்
    கழகமே கண்டுசேர்ந் திடுக!
நந்தமிழ்த் தோழர் நெஞ்சிலே ஆழ
    நற்றமிழ் உணர்ச்சியூட் டிடுக!
முந்துக பணிக்கே முயல்கவே மேனி
    மூச்செலாம் தமிழ்ப்பணி புரிக!
அந்தஓர் காலம் தனித்தமிழ் நாடும்
    அடையுமோர் காலமும் இதுவே! 2

ஏட்டிலே எழுதும் கருத்தெலாம் தூய
    தமிழிலே எழுதுக; பாடும்
பாட்டிலே புதுமைக் கருத்துடன் தமிழின்
    பண்களே இழைகவே; வாழும்
வீட்டிலே மழலை, சிறுவரின் பெயர்கள்
    மென்றமிழ் தனில்இலங் கிடவே!
நாட்டுக தமிழத் தோழரே ஈது
    நற்றமிழ் விடுதலைக் காலம்! 3

சாதிகள் சமயக் கூறுகள் யாவும்
    தமிழரைச் சிதைத்திடும் நோய்கள்!
ஓதுக யாங்கள் தமிழரே என்று
    மொழிவழி ஒருங்கிணைந் திடுக!
மாதர்கள் தமது மழலையை மானத்
    தமிழராய் மலர்ந்திடச் செய்க!
ஈதுசெய் வீரேல் தமிழினம் வாழும்
    ஏற்றமும் கூடுமென் றுணர்க! 4

சொற்பிறப் பியலின் ஆய்வெலாம் தமிழர்
    தொடர்ச்சியாய் பயில்கவே ஆழ;
கற்பவை கற்க, திருக்குறள் ஒன்றே
    கலங்கரை விளக்கமாம் வாழ!

முற்படும் தமிழின் மேன்மையை அயலார்
　　மொழிகளில் அவர்க்குடன் சாற்ற
பொற்புடன் சான்ற தாளிகை நிறுவிப்
　　பொலிந்திடப் பொருள்வளம் சேர்க்க! 5

தமிழ்ப்பணி புரியும் பல்இயக்கங்கள்
　　தம்முடன் ஒற்றுமை கொள்க!
அமுதமே அனைய சொற்பெருக் காற்றி
　　அறிவிலார் அறிவுறச் செய்க!
தமிழ்மொழி முதன்மை துறைதொறும் நாட்ட
　　தகுதிசேர் கிளர்ச்சியே புரிக!
தமையெலாம் காக்க நற்றமிழ் வேண்டும்
　　என்றுணர் நன்மையே பெறுக! 6

இல்லிலும் மற்றும் செயலகந் தனிலும்
　　ஏந்தல்பா வாணரின் உருவம்
நல்லுழைப் பீந்த தலைவர்நம் பெரியார்
　　நல்லுரு வம்பொருத் திடுக!
பிள்ளைகள் நெஞ்சில் இருபெரும் அறிஞர்
　　பெருமைகள் அழுத்தமாய் ஊன்றும்
நல்வினை புரிக நற்றமிழ் நிலத்தை
　　மீட்கும்நற் காலமும் இதுவே! 7

'தமிழ்நிலம்' சான்ற 'தென்மொழி' வண்ணத்
　　'தமிழ்ச்சிட்டு' என்னும்இம் மூன்றும்
தமிழரின் மூன்று விளக்கென வீட்டில்
　　தகைமையாய் ஒளிர்கவே நாளும்!
தமிழ்ப்பணி யாளர் தாளிகை மூன்றும்
　　தாயகம் முழுவதும் வளர்க்க!
இமைவிழிக் கெனல்போல் இப்பணி விரைவில்
　　இன்றமிழ் மொழிக்கெனப் புரிக! 8

பார்ப்பனீ யத்தைப் பரப்பிடும் இதழ்கள்,
　　பாலுணர் வூட்டிடும் இதழ்கள்,
தீப்படச் செய்க, தகுதிசேர் இதழ்கள்
　　செந்தமிழ் நிலத்தில்நாட் டிடுக!
நேர்ப்படச் செய்க வானொலித் துறையை
　　நெளியுமேல் பெரும்பெருங் கிளர்ச்சி
மேற்படச் செய்க! புழுங்குள்ளட் டப்பர்
　　மேனிக்கு முதுகெலும் பளிக்க! 9

கற்பனை நாடகம் தொடர் — 4

நிலவிலே கள்ளன்

— நாடக ஆசிரியர் : அதியமான்

காட்சி 6

உறுப்பினர்கள் : தேவேந்திரன், நாரதர்.

நாரதர் : திருமால், திருமால்.

தேவே : வாரும் வாரும்.

நாரதர் : தேவா! என்னை அழைத்தது எதற்காக?

தேவே : அஃதாவது, நீர் உடனே மண்ணுலகஞ் சென்று கிருபானந்தவாரியாரையும் கீரனையும் இங்கு அழைத்து வரவேண்டும்.

நாரதர் : ஏன் ?

தேவே : அவர்களிடம் ஒரு புதுச் செய்தியைச் சொல்லவேண்டி உள்ளது.

நாரதர் : என்ன செய்தி ?

தேவே : அஃதாவது அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் கென்னடி; இந்த உலகத்திலிருந்து, முன்னாள் மாயவன் நிலஉலகத்தில் பிறந்ததுபோல கென்னடி பிறந்திருக்கிறார், என்று மக்களை நம்பும்படி சொல்லச் செய்யவேண்டும்.

நாரதர் : எதற்காகவாம்?

தேவே : நிலஉலகத்திலிருந்து எந்த மாந்தனும் இனி நிலாவிற்கு வரக்கூடாது என்று சொல்வதற்கு.

நாரதர் : தேவா' கிருபானந்தவாரியாரைவிட, கீரனைவிட நன்றாகப் புளுகுவதற்கு 'இதயம் பேசுகிறது' என்ற தாளிகையை நடத்தும் மணியன்தான் ஏற்றவர். அவர் புளுகு உயர்தன்மை வாய்ந்தது.

தேவே : அவர் புளுகு உயர்ந்தது என்பது உமக்கு எப்படித் தெரியும் ?

நாரதர்: கொஞ்ச நாள்களுக்குமுன் அமெரிக்காவில் சங்கர் என்று ஒரு வான்கப்பல்தளம் இருப்பதாக ஒரு புளுகை விட்டாரே பார்க்கணும்!

தேவே : அஃது என்ன ஆயிற்று ?

நாரதர் : அந்தப் புளுகு மிக நல்ல உயர்ந்த புளுகு என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

தேவே : அப்படியா ?

நாரதர் : ஆமாம் தேவா, மணியன் பேச்சோடு மட்டும்மன்று, 'இதயம் பேசுகிறது' என்ற தாளிகையில் எழுதவும் செய்வார். கென்னடியே இங்குவந்து பார்த்துப் பேசியதாகக்கூட சொல்லுவார். புளுகுவதில் அவரை மிஞ்சியவர் நிலஉலகத்தில் வேறு யார் உளர்?

தேவே : அப்படியானல் அங்கிருந்து கிருபானந்தவாரியார், கீரன், மணியன் ஆக மூன்று பேரையும் இங்கு அழைத்துவர முடியுமா?

நாரதர் : அவர்களை இங்கு அழைக்கவும் வேண்டாம். நாம் சொல்லவும் வேண்டாம். கனவில் போய்ச் சொன்னாலே போதும் புளுகத் தொடங்கிவிடுவார்கள்.

தேவே : அப்படியானல் நீரேபோய் சொல்லி விடலாமே?

நாரதர் : சொல்லிவிடலாமே!

தேவே : சரி அப்படியானல் நானே அந்த வேலை நடக்கட்டும்.

நாரதர் : அப்படியே! இப்போதே போகிறேன்.
(போய்விடுகிருர்.)

காட்சி 7

உறுப்பினர் : தேவேந்திரன், நாரதர்.

நிலை : தேவேந்திரன் அமர்ந்திருக்கிருர். நாரதர் வருகிருர்.

நாரதர் : திருமால், திருமால்.

தேவே : வாரும்......வாரும். காயா? பழமா?

நாரதர் : காய்தான் தேவா!

தேவே : என்ன! ?

நாரதர் : நான் போய், கனவில்கூட அன்று, நேராகவே இதயம் பேசுகிறது மணியனைப் பார்த்துச் சொன்னேன்.

தேவே : என்ன சொன்னுர் அவர் ?

நாரதர் : இயற்கையாகவே அவர் புளுகிப் புளுகிக் கெட்டப் பெயர் வாங்கிவிட்டாராம்; இனி, புளுகுவதற்கு அஞ்சுகிருர்.

தேவே : அப்படி என்ன புளுகி விட்டார் ?

நாரதர் : அடே அப்பா அவர் புளுகி இருக்கிருரே வண்டி வண்டியாய்.

தேவே : அப்படியானுல் என்ன செய்வது ?

நாரதர் : தேவா, நான் வரும்போது ஒரு பள்ளிக்கூடத்தின் வழியாக வந்தேன். அங்கு ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

தேவே : என்ன சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார்?

நாரதர் : அ'தாவது நிலவிற்கு இனி மாந்தன் போகமாட்டான் என்று.

தேவே : எதற்காகவாம் ?

நாரதர் : நிலவில் மாந்தன் வாழ நீரும் இல்லை காற்றும் இல்லை என்று.

தேவே : அப்படியா ? நீர் நன்ருகக் கேட்டீரா ?

நாரதர் : உண்மையும் அதுதானே. அதனுல் இனி மாந்தர்கள் இங்கு வரமாட்டார்கள்.

தேவே : நல்லவேளை அப்படியானுல் நாம் இனி அஞ்சவேண்டாம்; அப்படித்தானே.

நாரதர் : ஆமாம், ஆமாம், இனி அஞ்சவேண்டாம்!

தேவே : தொல்லை நீங்கிற்று. நம் தேவர்களிடம் இந்தச் செய்தியை சொல்லிவிட வேண்டுமே.

நாரதர் : நம் ஆள்கள் வெறும் அச்சங்கொள்ளிகள்; அவர்களை அழைத்துச் சொன்னுல் எதையாவது கேட்டுக் கேட்டு நம் உயிரைக் கலக்குவார்கள். ஒரு தட்டி எழுதி வைத்துவிடலாம்.

தேவே : அதுவும் சரிதான். நம்முடைய எழுத்தர் சித்திர புத்திரனிடம் சொல்லி, தேவர் உலகத்தில் ஒரு தட்டியை நான் சொல்வதைப்போல எழுதச் சொல்லி முச்சந்தியில் வைக்க ஏற்பாடுகளை உடனே செய்திடும்.

நாரதர் : சரி சொல்லுங்கள்.

தேவே : தேவர்களுடைய கவனத்திற்கு,

நிலஉலகத்திற்கு வந்த கள்ளர்கள் உண்மையில் மாந்தர்களே. நம்முடைய ஆய்வுப்படி அமெரிக்கர் எனத் தெரியவந்தது. அவர்கள் இங்கு வந்து பார்த்தபோது மாந்தர்கள் நிலவில் வாழமுடியாது என்றும் அங்குக் காற்றும் நீரும் இல்லையென்றும் கண்டு சொல்லிவிட்டார்கள்! ஆகையால் இனியாரும் நிலவிற்கு வரமாட்டார்கள். எனவே தேவர்கள் யாரும் அஞ்சவேண்டாம்! கவலையற்று வாழலாம் என்று தேவேந்திரனுகிய நான் அறிவிக்கிறேன். இந்த ஆய்வை என் கூற்றிற்கிணங்க அடிக்கடி நிலஉலகஞ் சென்று சரியான உண்மைகளை நமக்கு அறிவித்த நாரதர்க்கு நாம் அனைவரும் நன்றி செலுத்துவோமாக, வணக்கம்.

இப்படிக்கு
தேவேந்திரன்.

(நாடகம் முடிவுற்றது.)

எத்தனைநாள் உதைபடுவாய்?

— பாவலர் இளஞ்சித்திரன்

பேருக்கோர் நாடில்லை,
　　பேச்சுக்கோர் அரசில்லை!
ஊருக்குள் உன்னிடமும்
　　ஒற்றுமை சிறிதுமில்லை!
ஊருக்கோர் இனியுன்னை
　　உதைப்பான்! வெட்டிப் புதைப்பான்!
　　உலகில் எவன்தான் மதிப்பான்?—நீயும்
எத்தனைநாள் உதைபடுவாய்?
　　இனியேனும் சுரணையுடன்
ஒத்திணைவாய்! இவ்வுலக
　　உருண்டையினுள் நிலம்பிடிப்பாய்!
செத்திடினும் தாழ்வில்லை!
　　சிறுத்தையே,வா! உரிமைப் போர்க்கே!
　　தென்னவன் மகனே! அஞ்சுதல் யார்க்கே!

தோளுக்கு வலியெங்கே?
　　துணிவெங்கே? இன்றயலான்
தாளுக்கு மண்டியிட்டுத்
　　தலைதாழ்த்திக் கிடக்கின்றாய்!
ஆளுக்காள் தான்உன்னை
　　அடிப்பான்! இடுப்பை ஒடிப்பான்!
　　அட,உன் கண்களையும் எடுப்பான்!—நீயும்
எத்தனைநாள் அடிபடுவாய்!
　　இதற்காநீ பிறந்துவிட்டாய்!
கத்துதற்கும் உன்குரல்வாய்
　　கம்மியதேன்? பகைமுகத்தை
மொத்துதற்குச் சீறிஎழு!
　　முதுபுலியே!வா! உரிமைப் போர்க்கே!
　　முதல்தமிழா!நீ அஞ்சுதல் யார்க்கே!

வீணுக்கு வாழ்கின்றாய்!
　　வெட்டிக்குத் திரிகின்றாய்!
தூணுக்குப் பெருத்துள்ளாய்!
　　சும்மாடாய்ப் பிறர்க்கானாய்!
கோணற் பயிலுமுன்னைக்
　　குட்டுவான்! ஏசித் திட்டுவான்!
　　உன்கைச் சோற்றையும் தட்டுவான்!—நீயும்
எத்தனைநாள் இப்படியே
　　இருந்திடுவாய்! புறம்போக்காய்ச்
சொத்தையாய்க் கிடந்திடுவாய்!
　　தூக்கிடுவாய் பல்லக்கு?
குத்துமொரு வேலாகக்
　　குருளையே,வா! உரிமைப் போர்க்கே!
　　கொல்களிறே,நீ அஞ்சுதல் யார்க்கே!

செய்திகள்

1. மாணவர் இலக்கிய மன்றத் தொடக்கவிழா: அரசு மேனிலைப்பள்ளி, சங்கராபுரம்:

சென்ற நளி 16 (1-12-84)-ஆம் நாள் காலை 11 மணி அளவில், தெ ஆ மா.வ., சங்கராபுரம், அரசு மேனிலைப் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவிற்குக் குதிரைச்சந்தல், அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், புலவர் திரு. செ.வரதராசனார் தலைமை தாங்கினார். சங்கராபுரம், அரசு மேனிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. நல். வீரமுத்து முன்னிலையேற்றார். தலைவரின் தலைமையுரைக்குப்பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார், இலக்கிய மன்றத்தைத் தொடங்கி வைத்து, ஏறத்தாழ ஒன்றரைமணிநேரம் சிறப்புரையாற்றினார். புயலும் மழையுமாக இருந்தும் மாணவ மாணவியரும், இருபாலாசிரியர்களும், ஊர்ப்பெரியவர்களும், அமைவாக இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது.

2. மாணவர் இலக்கியமன்ற விழா: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சௌந்திரவல்லிபாளையம்:

கடந்த 3-12-84-ஆம் நாள் திங்கட்கிழமை, சங்கராபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த, சௌந்திரவல்லிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மாணவர் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது. விழாவிற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையேற்றார். தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின், பள்ளித் தலைமையாசிரியரும், தொடக்கநாள் தென்மொழி அன்பரும் தொண்டரும் ஆகிய திரு. பெ கண்ணாயிரம் க.மு. வரவேற்புரையாற்றினார். பின்னர் 'தமிழ்ச்சிட்டு'ப் பாடல்களை மாணவர்கள் செந்தமிழ்ச்செல்வி, க. வளவன் ஆகியோர் பாடினர். 'பள்ளிப் பறவைகள்' நூலின் தமிழ்க்கும்மிப் பாடலை எட்டாம் வகுப்பு மாணவியர்கள் பாடிக்கொண்டே கும்மியடித்தனர். மாணவியரின் தமிழ் ஈடுபாடு மிகவும் போற்றத்தக்கதாய் இருந்தது. இக் கலை நிகழ்ச்சியை நெடுநாள் தென்மொழி அன்பரும், பள்ளித் தமிழாசிரியருமாகிய புலவர் திரு. ஞா. நன்முல்லை க.மு. அவர்கள் முன்னிருந்து நடத்திவைத்தார். கலைநிகழ்ச்சிக்குப்பின், திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார், புலவர் செ.வ புகழேந்தி அறி.இ.ஆ.ப, புலவர் இ தேவநேயச்சித்திரன் க.மு., புலவர் தமிழ்வேந்தன் எழில் ஆகியோர் நல்லுரையாற்றினர்கள். புலவர் தேவநேயச் சித்திரன் அவர்கள் பாடிய, பாவேந்தரின் 'நூலைப்படி' என்னும் பாடலை மாணவ மாணவியரும், ஆசிரியர்களும் கேட்டு மிகவும்

தமிழினம்

தாழ்ச்சியும் வீழ்ச்சியும் மீட்சியும்

— இரணியன்

கருத்துகள், ஆட்கள், குழுக்கள் :

ஒரு கருத்து என்பது ஒருவரில் ஒரு பகுதிதான்! ஒரு கருத்தை ஏற்பதற்காக ஒருவரின் எல்லாக் கருத்துகளையும் ஏற்க வேண்டும் என்றோ, ஒரு கருத்தை எதிர்ப்பதற்காக ஒருவரின் எல்லாக் கருத்தையும் எதிர்க்கவேண்டும் என்றோ—பெரும்பாலார் பிழைபட உணர்ந்துகொள்கிறார்கள்! அல்லது வற்புறுத்தப்படுகிறார்கள்!

குழுமனப்பான்மைகள் நம்மை அடிமை கொள்கின்றன! பதிதுப்பேர் கூடினால் எட்டுக்குழுக்களாவது உருவாகிவிடுகின்றன! எங்கோ இயங்கும் இயக்கங்களை நேசித்தாலும், நாமும் ஒரு குழுவினுள் நம்மை அடைத்துக்கொண்டுதான் சிந்திக்கிறோம்! எல்லாக் குழுக்களிடையிலும் நாம் நேசிக்கத்தக்க கூறுகள் உண்டு என்பதை ஏற்க நாம் அணியமாய் இருப்பதில்லை!

சீனாவில் லியோசோசி குழு உருவானால், இங்கும் ஒன்று உருவாகிவிடுகிறது! அங்கே நால்வர்குழு உருவானால், இங்கேயும் ஆதரவுக்குழு ஒன்று உருவாகிவிடுகிறது! டிராட்சுகி ஆதரவுக்குழு எங்கேனும் உருவானால் இங்கும் ஒன்று உருவாகிவிடுகிறது!

ஈழ விடுதலையில் நாம் நாட்டம் கொள்கிறோமா? ஏதேனும் ஒரு குழுவிற்குள் நம்மை மனத்தால் இணைத்துக்கொள்ளாமல், அதை ஆதரிக்க நம்மால் இயல்வதில்லை! மனத்தால் நம்மை உட்படுத்திக்கொண்ட இயக்கத்திற்கு நேசம் அற்ற ஓரியக்கம் பற்றி அவதூறு பேசினால்மட்டுமே நமக்கு நிறைவேற்படுகிறது!

(முன் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்வெய்தினர். இறுதியில் பாவலரேறு அவர்கள் மாணவ மாணவியர்க்கேற்ற கருத்துரைகளை விரிவாக எடுத்துரைத்தார். விழா முடிவில் மாணவ மாணவியர் பலர் தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டிற்கும் உறுப்பினர் கட்டணம் பாவலரேறு அவர்களிடம் நேரிலேயே செலுத்தினர். அதன்பின், தலைமையாசிரியர் திரு. கண்ணாயிரம் அவர்களும், திருவாட்டி. செயலக்குமி கண்ணாயிரம் அவர்களும், பாவலரேறு அவர்களுக்கும் அவருடன் வந்திருந்த அன்பர்களுக்கும் தம் இல்லத்தில் விருந்து படைத்தார்கள். பின் அனைவரும் ஊர் திரும்புகையில் ஆசிரியர்களுடன் மாணவ மாணவியர் பலரும் இருந்து, பிரியாவிடை தந்த அன்புணர்வைப் பாவலரேறு அவர்கள் வழியெல்லாம் மகிழ்ந்து பாராட்டிக் கொண்டே வந்தார்கள். 0

‘நான் சொல்வதில் பிழை இருக்க முடியுமா’ என ஒவ்வொருவரும் கேட்கிறோம்! ‘என் தலைவன் சொன்னதில் பிழை இருக்க முடியுமா’ என ஒவ்வொருவரும் எண்ணமிடுகிறோம்! தன்னிடத்தில் தன் தலைவனிடத்தில் பிழை இராது என்ற நம்பிக்கை நமது பாதையில் தோன்றிய தடைக்கல் என்பது நமக்குப் புலனாவதில்லை!

மற்றவர் கூறுவதில் உண்மை இருக்கலாம் எனச் சிந்திக்கத் தவறுவது நம் கால்களைப் பின்னோக்கி இழுத்துவிடுகிறது என்பதை உணராதவர்களாக இருக்கிறோம்!

மனநிலை முடம் :

எப்போதும் விட்டுக்கொடுப்பதைப் பெருந்தன்மை என்றே கருதுகிறோம்! அது இளித்தவாய்த்தனம் என்பது புலப்படுவதில்லை!

நம்மவரை மட்டுமே கண்டிப்பது பரந்தமனப்பான்மை என நினைக்கிறோம்! அ’து நம்மையே நாசமாக்கக்கூடியது என்பது விளங்குவதில்லை!

குடகு மக்கள் வாழும் குடகுமலை கன்னடர்க்கு உரியது என்று பிழைபட நினைத்தோம்! குடகு கன்னடத்தைவிடத் தமிழுக்கு நெருக்கமானது எனத் தெரிந்திருக்கவில்லை! எனவே, தமிழகத்துடன் குடகைச் சேர்க்கத் தவறினோம்! இந்த போன்ற இளித்தவாய்த்தனம் வரலாறு நெடுகிலும் நமக்கு வீழ்ச்சியை ஏற்படுத்திவிட்டது!

எங்கே தமிழன் அடிபட்டாலும் ‘இந்த ‘ராஸ்கல்’ ஒழுங்கா இருந்திருக்கமாட்டான் ‘சார்’ என்று படிப்பாளித்தனமாகப் பேசுகிறோம்!

நம்மை மேலும் வதைப்படுத்திக்கொள்வதற்கும், நம் உரிமைகளை மேலும் நழுவவிடுவதற்கும் நாம் வாய்ப்பமைத்துக்கொள்வது நமக்கு விளங்குவதில்லை!

ஒரு நல்லவனைவிட, நல்லவனாக நடிப்பவனையே நாம் நேசிக்கிறோம்! ஒரு செயலாளியைவிடவும் பேச்சாளியிடத்தில்தான் நாம் நாட்டம் கொள்கிறோம்!

சேய்மைப் படுத்தமும் ஆங்கிலக்கல்வியும் :

கற்றவனை இந்த மண்ணிலிருந்து பிரித்து வைப்பதற்காகவும், இந்த மக்களிடமிருந்து அவனைத் தனிமைப்படுத்தி வைப்பதற்காகவுமே, இங்கே ஆங்கில வழிக்கல்வி கற்பிக்கப்படுகிறது!

ஆங்கிலப் பள்ளியிலேயே பயின்றவன், ஆங்கிலவழி வரலாறே கற்பிக்கப்பட்டவன், இந்த மண்ணுடன் ஒட்டாதவனாக வளர்ந்து சாகிறான்!

அவனால், உளுத்துப்போன இந்தக் குமுகாய அமைப்புக்கு எந்த ஊறுபாடும் நேர்வதில்லை! எனவே, ஆண்டைகளும் ஆளு

Scanned with CamScanner

வோரும் ஆங்கிலவழிக் கல்விக்கு ஆதரவு நல்குவோராய் இருந்து வருகின்றனர்!

எது தீர்வு? ஏன்?

இந்த வாழ்க்கை அவலங்களும் வரலாற்றுச் சரிவுகளும் ஏன் ஏற்பட்டன? நமது இனம் தாழ்ந்து தளர்ந்து வீழ்ந்துபட்ட தால் ஏற்பட்டன!

இதிலிருந்து நாம் மீள்வதற்கு—எழுந்து நிற்பதற்கு என்ன தான் தீர்வு?

ஒரே ஒரு தீர்வுதான்! அது நமது மண்ணை நாம் மீண்டும் அடைதல் என்பதே!

நமது மண்ணை நாம் மீண்டும் அடைவது என்பது எதனால்? நாம் ஆண்ட இனம் என்பதனாலா? உலகில் முந்தித்தோன்றிய மூத்தகுடி என்பதனாலா? அறமும் மறமும் கண்டுரைத்த பரம்பரை நமது என்பதாலா?

இல்லை!

நாம் மாளும் இனம் அன்று, வாழும் இனம் என்பதால்; நாம் இன்றும் இனியும் வாழவேண்டிய குடிகள் என்பதால்! அறத்தையும் மறத்தையும் நாமும் அமைத்துக்கொள்ள வேண்டியவர்கள் என்பதால்!

நமது தாயகத்தை நாம் மீண்டும் அடைய நினைப்பதன் மூலம், இந்தியத் துணைக்கண்டத்துத் தேசிய இனங்களிடையே மெய்யான நேயமும் அமைதியும் ஒத்துழைப்பும் நல்வாழ்வும் உருவாக வேண்டும் என விரும்புகிறோம்!

தேசிய இனங்கள் விடுபடுவதன்மூலம், சுரண்டலும் சூழச்சியும் ஒழிந்து, உழைப்பாளர் ஒற்றுமை உயரும் என நம்புகிறோம்!

மக்கள் மொழிகளும் வாழ்வும் வளம்படும் என எண்ணுகிறோம்! இந்தியத் துணைக்கண்டத்து நாடுகள், வல்லரசுகளாலும், பன்னாட்டுப் பெருவாணிகக் கொள்ளையர்களாலும் சுரண்டப் படுவது இல்லாமற்போகும் என எண்ணுகின்றோம்!

வாழ்க்கைச் சீர்கேடுகளை மாய்ப்பதற்கான வாய்ப்புகள் மலரும் என்றும், உலக நல ஆக்கவினைகளில், நாம் பயன்தரத் தக்க வகையில் பங்கேற்க இயலும் என்றும் மெய்யாகவே நாம் நம்புகின்றோம்!

உலகில் அமைதி மலர்ச்சி பெறுவதற்கு நமது பங்களிப்பைச் செலுத்த இயலும் என உறுதியாக நம்பிக்கை கொள்கிறோம்?

தடையும் விடையும் :

ஆனால், உலகைக் கொள்ளையிடும் வல்லரசுகள், நம் தாயக மீட்புப்போரை நசுக்கும்படி இந்திய ஒற்றையாட்சிக்குக் கட்டளை

விடும். தேசிய இனங்களின் விடுதலை, பெருவாணிகப் பேரரசுகட்கு இடையூறாகவே இன்று தெரிவதால், அனைத்துக் கொலைக் களங்களையும் கொடுத்து, மக்கள் உரிமை மீட்புப் போர்களையும், தேசிய இன விடுதலைப் போர்களையும் நசுக்குமாறு கட்டளை பிறப்பிக்கும்! எனவே நமது செயல்திட்டம் மிக நுட்பமானதாகவும், தொலை நோக்குடையதாகவும் இருக்கவேண்டியது ஒரு கட்டாயத் தேவை ஆகிறது!

நாம் தன்னுரிமை படைத்த ஒரு தனித் தேசிய இனத்தவர்! நமக்குரிய உரிமைகள் குறைவின்றிக் கிடைக்குமாயின், நம் நன்மைகள்பற்றி முடிவுசெய்துகொள்ளும் உரிமை நமக்கே இருக்குமாயின், எவராலும் நாம் சுரண்டப்படாமலும், அவமானப்படாமலும், தன்மானத்துடன் வாழ வாய்ப்பு இருக்குமாயின், நாம் எந்தத் தேசிய இனத்துடனும், எவ்வெத் தேசிய இனங்களுடனும் சேர்ந்து வாழலாம்! இணைந்து வாழலாம்!

ஆனால், இவை கிட்டாத நிலையில், சேர்ந்துதான் வாழ வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமை எவனுக்கும் இல்லை!

சேர்ந்து வாழ்வதோ, பிரிந்து வாழ்வதோ நமது விருப்பத்தைப் பொறுத்தது! சேர்ந்திருப்பதால் நமக்கு நன்மையில்லையெனில் நாம் விலகிக்கொள்ளவே விரும்புகிறோம்!

இப்போது நாம் உண்மையில் சேர்ந்தா இருக்கிறோம்? இல்லை! கட்டிப் போடப்பட்டு இருக்கிறோம்! எனவே, இந்தக் கட்டுகளை அறுத்து எறிவதே இப்போது நம் கடமையாக இருக்கிறது!

உலகப் பொதுநலச் சட்டத்தின்படி, ஒரு தேசிய இனம் தனித்து வாழ விரும்புவது முற்றும் நேர்மையானதாகும்! முறையானதாகும்!

கடந்த 1982 திசம்பர் 6 ஆம் பக்கல் முதல் 12 ஆம் பக்கல் வரை அமெரிக்கக் கண்டத்தில் உள்ள கோசுடாரிக்கா நாட்டின், அலாச்சுவேலா நகரில் கூடிய முதல் உலக-மக்கள் உரிமை மாநாடு, கொடுங்கோலாட்சிக்கு எதிராகப் புரட்சி நடத்துவது அடிப்படை மக்கள் உரிமை எனத் தீர்மானம் நிறைவேற்றி, உலகெங்கும் அறிவித்துள்ளது! (பார்க்கவும்: யுனெசுகோ கூரியர் (தமிழ்) இதழ்—அக்டோபர் 1983; பக்கம் 14)

எனவே, ஒரு மக்களின் விடுதலைக்காகத் திட்டமிடுவது எவ்வகையிலும் பிழையானதாகாது!

விடுபடுவதால் நமது தேசம் சிறியதாகிவிடும் எனப் பலர் உளறுகிறார்கள்! ஏறத்தாழ நமது தமிழ்த் தேசம் இங்கிலாந்தின் பரப்பளவிற்குச் சமமானதென்பதை அவர்கள் உணரத் தவறுகிறார்கள்! நம்மிலும் பெரியதாக உலகில் பத்துப் பன்னிரண்டு தேசங்களே உள்ளன என்பதை இவர்கள் உணரத் தவறுகிறார்கள்!

கட்டிப் போடப்பட்ட சந்தை ஆடுகள்போல், தேசிய இனங்கள் இருப்பதனால்தான், அயலக வல்லரசுகளும், பன்னாட்டு

வாணிகச் சுரண்டல் கொள்ளையரும், தங்குதடையற்ற முறையில் இந்தத் துணைக்கண்டத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். தேசிய இனங்கள் விடுதலை எய்துமாயின், இந்த வாய்ப்பு அவற்றுக்கு இல்லாமற்போகும்!

தேசிய இனங்களிடையே உள்ள பகைமை முற்றிலும் நீங்கி ஒத்துழைப்புடனும், ஒற்றுமையுடனும், ஒப்புரவுடனும் அவை வாழத் தொடங்கும்!

இந்திய 'ஒருமைத் தனம்' நீடிக்கும்வரை, இத் துணைக் கண்டத்தின் எப்பகுதியிலும், சமநெறி, பொதுவுடைமை, மக்கள் நேயம், அமைதி எதுவும் தோன்றப் போவதில்லை!

இவை, இந்தியத் துணைக் கண்டத்தினுள் தோன்றவே கூடாது என நினைப்பவன் மட்டுமே தேசிய இனங்களின் விடுதலையை எதிர்ப்பான்!

ஏற்றத்தாழ்வு ஒழிந்து, சாதிகள் மடிந்து, எல்லார்க்கும் எல்லாம் என்னும் சமநெறி மலர்ந்து, மக்கள் நிலை மேன்மையுற வேண்டும் என நினைப்பவர் யாவரும் தேசிய இனங்களின் விடுதலையை நாடி நிற்பார்கள்!

நமது விடுதலையில் நாம் :

இதற்காகத் திட்டமிடத் தொடங்குகையில், முதலில் நம்மை நாமே எவ்வளவோ திருத்தியமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது!

மீண்டும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்!

நாம் வாழும் காலம் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி! இது அணுப் போர்க்காலம்! வேதியக் கலங்கள்கொண்டு எதிரிகள் தாக்கப்படுகின்ற காலம்! அறிவியற்கருவிகளால், மாந்த வாழ்வு ஏவுகணை வேகத்தில் முன்னேறி வருகின்ற காலம்!

நாம் மீண்டும் சழகக் காலத்திற்குத் திரும்ப இயலாது! நிலவுடைமை மன்னர்களின் பெருமைகளை நாம் சுமந்து செல்ல இயலாது! வேலும் வில்லும் ஏந்திப் போரிட இயலாது! தேர் நிழலிலும் குடை நிழலிலும் ஓய்வெடுக்க இயலாது!

நாம் நாளையை நோக்கிமட்டுமே புறப்பட இயலும்!

எனவே, பழைமையைக் காட்டிப் பெரிய தெளிவு ஒன்றையும் நாம் பெற்றுவிட இயலாது என்பதை நினைவில் இருத்த வேண்டும்!

வெறும் முழக்கங்களை இன்று நாம் பெரிது பெரிதாய் முழங்குகிறோம்! ஆட்சியாயினும், அரசாயினும், கொள்கையாயினும் போராட்டமாயினும் எல்லாவற்றிலும் முழக்கங்களையே கொள்கைகளாய் முன்வைக்கிறோம்!

(16-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி சிங்களவர் நாடாகவும் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் தமிழ் ஈழ நாடாகவும் ஆக்கப்பட்டிருக்கும்.

ஒரு தொல்லையும் இல்லாமல் ஆங்கிலேயர் தமிழ் ஈழ நாட்டைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பார்கள்.

அன்று இலங்கையிலே தமிழ் ஆட்சிமொழியாக இருந்தது-தமிழர்களுக்கு எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. படைத்துறையிலும், காவல்துறைப் பதவிகளிலும் சம வாய்ப்பைத் தமிழன் பெற்றிருந்தான். குடியரசு ஆட்சி அமைப்பும் இருந்தது.

சிங்களவர்கள் நாகரிகமானவர்களாக, பண்பு உள்ளவர்களாகத்தாம் இருப்பார்கள் என்று தமிழர்கள் நம்பியிருந்தார்கள்.

ஆகவே தனி ஈழத்தமிழ்நாடு உறுதியாகக் கேட்காமல், ஈழத் தமிழர்கள் ஏனோ தானோ என்று புறக்கணிப்பாக இருந்து விட்டார்கள்

சிங்கள இனமும், ஈழத்தமிழ் இனமும் சேர்ந்த இலங்கை அரசு அமைப்பை மக்கள் கையில் கொடுத்துவிட்டு வெள்ளைக்காரன் போய்விட்டான்.

ஈழத்தமிழர்களின் அந்த நம்பிக்கையைக் கடந்த 25 ஆண்டுகளாகச் சிங்கள வெறியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக குலைத்துக் கொண்டு வந்து, இப்போது உச்சகட்டத்திற்கு வந்துள்ளனர்.

இன்று தமிழுக்கு சம வாய்ப்பு இல்லை-தமிழர்கள் இரண்டாம் தரக் குடி மக்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனர். படைத்துறையிலும் காவல் துறைப் பணிகளிலும் இவர்களுக்கு இடமில்லை-மற்ற துறைகளிலும் உரிய பங்கு கொடுக்கப்படவில்லை. தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமிழர்களை விரட்டி விட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றுகிறார்கள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

முழக்கங்கள் கொள்கைகளாவதில்லை! அந்த வெற்று முழக்கங்கள் விளக்கங்களும் ஆவதில்லை! திட்டமிடாத துணிவானசெயல்கள் கூடப் போராட்டமாவதில்லை!

நம் நோக்கங்களை, அவற்றின் நேர்மைகளை, அவற்றுக்கான காரணங்களை நாம் தெளிவாக்க வேண்டும்! வெற்றுக் கூச்சலிட்டு, இங்கும் அங்குமாகத் தோன்றிச் சடுதியில் காணாமல் போய்விடும் அவல நிலைமைகளை நாம் தவிர்க்க வேண்டும்!

தெளிவான திட்டங்களுடன் நம்மை வலுவாக்கிக்கொண்டு வரவேண்டும்! நம் செயல்திட்டங்களால் நமது வலிமை—நமது கொள்கை மக்களுக்குப் புலனாக வேண்டும்! எதிரிகளால் உணரப் பெற வேண்டும்!

(தொடரும்)

'ஏனென்று கேட்டால் சிறைவாழ்வு—இம் என்று சொன்னால் காட்டுவாழ்வு' என்று நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சிங்களப்படைத்துறையினர் தமிழ்ப்பெண்களை வலுக்கட்டாயமாகக் கற்பழித்தால், தமிழர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமாம்—எதிர்த்துக் கேட்டால் இறப்புலகம் அனுப்பப் படுவார்களாம்.

இப்படிப்பட்ட கொடுமையான காட்டுவிலங்காண்டித்தனமான செயல்களைச் செய்ய, சிங்கள வெறியர்கள் தொடங்கி விட்டனர்.

கடந்த 25 ஆண்டுகளாகக், கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழர்கள் அடிமைகள் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டே வருகின்றனர்.

ஆகவே தங்களுக்கு விடுதலை வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழ் ஈழ நாடு வேண்டுமென்று போராடுகிறார்கள், அங்குள்ள தமிழர்கள்.

இதில் என்ன தவறு இருக்கிறது?

உண்மையிலேயே மாந்தப் பண்பு உள்ளவராக செயவர்த்தனா இருந்தால்-தமிழர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் தன்னால் காக்க முடியவில்லை என்று தெரிந்தவுடன் தமிழர்களுக்குத் தனி நாடு கொடுத்திருக்க வேண்டும்.

தனி நாடா கொடுத்தார் செயவர்த்தனா?

இல்லையே....................!

தனி நாடு கொடுப்பதற்குப் பகரமாகத், தமிழர்கள் கொடுமையாகக் கொல்லப்படுவது நயனமதான் என்று தருக்கமல்லவா புரிந்துகொண்டிருக்கின்றார்.

கோட்டானிடம் குயிலின் இனிமைக் குரலை எதிர்பார்ப்பது எப்படிப்பட்டதோ, அப்படிப்பட்டதுதான் இந்தச் செயவர்த்தனா என்ற காட்டுவிலங்காண்டியிடம் நயன்மையையும், மாந்தப் பண்பையும் மக்களரசு உரிமையையும் எதிர்பார்ப்பது.

இலங்கையில் இருக்கும் காட்டு விலங்காண்டி செயவர்த்தனாவிடம் மாந்தப்பண்பை எதிர்பார்ப்பது மடமை என்பதை நம்மால் உணர முடிகின்றது.

ஆனால்.........இந்தியாவிலே...............

அண்டை நாட்டு வரலாறுகூடத் தெரியாத, இந்திய நாட்டின் தலைமையமைச்சராக நீடிக்க முடியாது என்பதை மெய்ப்பித்து விட்டுச் சென்ற மொரார்சிதேசாய் கூறியிருப்பதைக் கேட்டு நம்மால் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியவில்லையே......!

'ஈழத் தமிழர்கள் எல்லாம் இந்தியாவிலிருந்து பிழைக்கப் போனவர்களாம்-ஆகவே அவர்கள் தனிநாடு கேட்கக் கூடாதாம்-அது தவறாம்'. இப்படிப் பிதற்றியிருக்கின்றார், முன்னாள் இந்தியத் தலைமையமைச்சராக இருந்த அந்த அறிவாளி!

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருந்தது தமிழ் இனம்.—தமது ஏனோ தானோ என்று இருந்துவிட்ட பொறுப்பற்ற போக்கால், கடந்த 35 ஆண்டுகளாகச் சிங்களவர்களுக்கு அடிமையாக ஆகியிருக்கின்றது.

தனது இழந்த நிலையை—உரிமையை மீட்டுக் கொள்ள ஈழத் தமிழ் இனம் போராடுகின்றது. இந்த உண்மை புரியாது உளறிக் கொண்டு இருக்கின்றார் மொரார்சி தேசாய்.

வரலாற்றின் உண்மை நிலையை மொரார்சி தேசாய் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இப்படிப்பட்ட சிக்கல்களில் தலையிடாமல் ஒதுங்கியாவது இருந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்திலேகூட இதுபோன்ற தவறான கருத்துகளைச் சிலர் வேண்டுமென்றே பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள் — தமிழ் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களைத் தமிழ் மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

தமிழ் ஈழ நாடு வேண்டுமென்று கூறினால், அ'து அனைத்துலகச் சட்டத்தையே மீறிய செயலாகும் என்று பலர் அறியாமையால் தவறாகக் கூறிக்கொண்டு இருக்கின்றனர்—சிலர் வேண்டுமென்றே இவ்வாறு கூறித் தமிழ் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

தேசம் என்றால் என்ன?

எது, எது இருந்தால் ஒரு நாடு அனைத்துரிமைகளும் உள்ள தேசம் என்று கருதப்படும்?

அனைத்து நாட்டுச் சட்டப்படி கீழே கூறப்பட்டுள்ள நான்கு உறுப்புகளும் பொருந்தியதுதான் தேசம் என்று ஏற்றுக் கொள்ளப்படும்.

1. நிலப்பரப்பு இருக்க வேண்டும்.
2. அதில் மக்கள் வாழ வேண்டும்.
3. அந்த மக்களை ஆட்சி செய்ய ஓர் அரசு இருக்க வேண்டும்.
4. அந்த அரசு அனைத்துரிமைகளும் உள்ளதாக இருக்க வேண்டும்.

இதில் உள்ள மூன்றாவது உறுப்பு அனைத்துத் தேசச் சட்டத்தில் கீழ்க்காணுமாறு விளக்கப்பட்டிருக்கிறது.

திரு.மகேசு பிரசாத் டான்டன் என்பவரால் எழுதப்பட்ட அனைத்துலகச் சட்டம் (International law) என்னும் பொத்தகத்தில் (ஆறாவது பதிப்பு - இயல் VII) 51-ஆவது பக்கம் 7-ஆவது பத்தியல் கூறியிருப்பது:

'There must, thirdly, be a Government that is one or more persons who are the representatives of the people and rule according to the Law of the land. An anarchistic Community is not a state.

'ஓர் அரசு இருக்க வேண்டும். அஃது ஒன்று அல்லது பல மக்கள் பகர்வாளர்களால், (Representatives) அந்த நாட்டுச் சட்டப்படி ஆட்சி செய்யப்பட வேண்டும் ஒழுங்கற்ற, காட்டு விலங்காண்டிக் குப்பலால் ஆட்சி செய்யப்படுவது நாடு என்று கருதப்பட மாட்டாது'.

இலங்கையிலே என்ன நடந்து கொண்டு இருக்கின்றது?

தமிழர்களும், தமிழ்ப் பெண்களும், குழந்தைகளும் கொடுமையாகக் கொல்லப்படுகின்றனர். அவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்படுகின்றன. தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுச் சாகடிக்கப்படுகின்றனர். தமிழ்க் குழந்தைகள் தீயிலே தூக்கி வீசி எறியப்படுகின்றனர்.

அடைக்கலம் என்று அரசு அமைத்துள்ள ஏதிலிகள் (அகதிகள்) தங்குமனை (முகாம்)களுக்குச் சென்றால், அங்கே தமிழர்கள் எல்லோரும் அடித்து நொறுக்கப்பட்டுக் கூண்டோடு சாக்காட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். நூற்றுக்கணக்கான தமிழர்களைச் சிறையில் அடைத்து வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்கள் எல்லாரையும் பட்டினி போட்டுக் கொல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

ஏன் இந்தக் கொடுமைகள்? — இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்று இலங்கை அரசைக் கேட்டால், படைஞரையும், காவலரையும், சிங்களக் குண்டர்களையும் எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறுகின்றது இலங்கை அரசு.

ஆனால், மறைமுகமாகப் படையையும், காவலரையும் சிங்களக் குண்டர்களையும் தூண்டிவிட்டு, ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டும் இலக்கக்கணக்கான தமிழர்களை ஏதிலிகளாக்கிக் கொண்டும் இருக்கின்றது, செயவர்த்தனாவின் அரசு.

'(An anarchistic Community is not a state)

ஒழுங்கற்ற காட்டு விலங்காண்டிக் குப்பலால் ஆட்சி செய்யப்படுவது தேசமென்று கருதப்படமாட்டாது' என்பதுதான் அனைத்துநாட்டுச் சட்டமாகும்.

இலங்கையில் இப்போது ஆட்சி செய்யும் அரசின் செயல்கள், ஓர் ஒழுங்கான அரசின் செயல்களாக இல்லை. கட்டுப்பாடற்ற காட்டு விலங்காண்டிக் கும்பல்களின் நடவடிக்கைகளாகத்தாம் அதன் செயற்பாடுகள் இருக்கின்றன. (தொடரும்)

அன்று சிறைப்படுத்தப்பட்டோரின் நலம் கருதிப் பத்தாண்டில் விடுதலை செய்யக்கோரி நிகழ்த்திய உரைகளின் தொகுப்பை முடிந்தால் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றேன். தங்களின் இதழ்களை ஆவலுடன் எதிர்நோக்கும். அன்புள்ள,

ம. சுந்தர். திரிச்சி-20

0: 1048 : திருவள்ளுவரைப்பற்றியும், அவரது திருக்குறளைப் பற்றியும் பேசும் தமிழறிஞர்கள், வள்ளுவரின் கருத்துகளுக்கு மூல அடிப்படையாக விளங்கும் சமணசமயக் கொள்கைகளைப் பற்றியும், வள்ளுவர் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்பது பற்றியும் ஏனோ பேசுவதில்லை.

சமணம் ஐம்பெரும் பாவியங்களில் மூன்றையும், தொல்காப்பியம், எண்ணற்ற இலக்கியங்கள், இலக்கண நூல்கள் ஆகியவற்றைப் படைத்துத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியிருக்கிறது. தமிழுக்கும், தமிழருக்கும் ஒழுங்குமுறைகளை வகுத்தளித்த, சமண சமயத்தின் செய்நன்றியை வாய்ப்பேற்படும்பொழுதெல்லாம் தமிழறிஞர்கள் நினைவுகூற வேண்டும்.

அதுவும் சமணத்தமிழறிஞர்கள் பற்றிய விழாக்களில், அகத்தியம் சமணசமயம் பற்றி விளக்கப்பட வேண்டும். இது சமணத்திற்குத் தமிழர்கள் காட்டும் நன்றியாக அமையுமன்றோ?

உண்மையுள்ள, — துப்பாக்கி. தி. அன்பழகன், திருச்சி-16.

0: 1049 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். சென்ற 'தமிழ்நிலம்' கொற்கைத் தமிழ்மன்றத் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாச் சிறப்பிதழாக வெளி வந்தமை, விழாவில் பங்கேற்கவியலாத எப்போன்றோரை நேரில் பங்கேற்று அனைத்தையும் அறிந்தது போன்ற உணர்வைத் தந்தது; உள நிறைவளித்தது.

வள்ளுவத்தை மறந்து தடுமாறித் தவிப்போர் இனியேனும் உணர்ந்து ஊர்கள்தோறும் சிலையெடுக்க முன் வந்து வள்ளுவரை வழிகாட்டியாக ஏற்றுப் போற்ற இத்தகு விழாக்கள் உறுதுணையாக அமையட்டும்!

கேடுகெட்ட நடிகர் நடிகையர்களுக்கு மன்றம் அமைத்து மன அரிப்பைப் போக்கிக்கொள்வதை விட்டொழித்து மான உணர்வுடன் தமிழ்ப் புலவர்களுக்கு மன்றங்கள் நிறுவிப் பெருமை சிறக்கும் பேறு பெறட்டும்!

தென்மொழியும், தமிழ்ச்சிட்டும், தமிழ்நிலமும் உணர்வார்ந்த உலைக்களத்துத் தீப்பொறிகளாய் உணர்வு கொளுத்தட்டும்.

— நன்றி. கடவூர். மணிமாறன் க.மு. கிருட்டிணராயபுரம்.

0: 1050 : பெரும்பாசத்திற்கும் மதிப்புக்குமுரிய தமிழினத் தலைவர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு உங்கள் அன்பு வேண்டி நிற்கும் உங்கள் அன்புத் தொண்டன் 'கரிகாலன்' பணிவன்பான வணக்கத்துடன் எழுதும் மடல். ஐயா! உங்களுக்கு ஒரு மடலும், கட்டுரையும் அனுப்பியிருந்தேன். என் மடலுக்கு உங்களிடமிருந்து விடை வராமை கண்டு மனம் மிகவும், அளவிலாத் துன்பம் கொள்கிறது. என்மீது உங்களுக்கு இன்னும் சினம் தணியவில்லையோ? என்று தோன்றுகிறது. சில ஆண்டுகள், குடும்பம், பொருளியல் பற்றுக்குறை, வாழ்க்கையில் வறுமை போன்ற இத்தகு கடும் சூழலில் சிக்கிக்கொண்டு, என் வாழ்வில் சில பகுதிகள் கழிந்துவிட்டன. என் வாழ்நாளில் வாழும் சில ஆண்டுகளேனும் தமிழ்நாடு விடுதலைக்குக்கடுகளவேனும்பயன்படவேண்டும்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

என்று என் நெஞ்சம் விழைகிறது. நானும் என் குடும்பமும் வறுமை எனும் காட்டாற்று வெள்ளப்பெருக்கில் சிக்கிக் கரை ஏறத் துடிக்கும் இந்த நேரத்திலும், என் உள்ளம் தமிழக விடுதலை பற்றியும், தமிழ்நாடு, விடுதலைக்குப் பின்னர் எப்படி அமையவேண்டும் என்பதைப் பற்றியுமே சிந்திக்கிறதே தவிர மற்றதைப் பற்றிச் சிந்திக்க மறுக்கிறது.

இந்தச் சிந்தனையைத் தடுக்கவும் என்னால் இயலவில்லை. இயக்கத்திற்குப் பொருளியல் துறையில் என்னால் உதவ இயலாத நிலையில் நான் இருப்பினும், உள்ளத்தாலும், உடலாலும் இயக்கத்திற்கு என்னால் உதவமுடியும் என்று தோன்றுகிறது. 'கலைஞர்' மணிவிழாவிற்கு நான் வந்தபோது உங்களைக்காண ஆவலுடன் இருந்தேன். அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தமையால் 'தென்மொழி' அலுவலகம் மூடி இருந்தது. அடுத்து என். டி. ஆரின் பொதுக்கூட்டத்துக்கு வந்து இருந்தேன். அன்று உ.த.மு.க. முதன்மைச் செயலகதில் யாரும் இருக்கவில்லை. எனவே ஏமாற்றத்துடன் திரும்பினேன். நான் இரண்டுமுறை சென்னை வந்தேன். ஒரு திங்களாகத் 'தமிழ்நிலம்' வரவில்லை. செப்டம்பர்-அக்டோபர் திங்கள் தென்மொழியும், தமிழ்ச்சிட்டும்தாம் வெளிவந்திருந்தன.

(சென்ட்ரல் புகாரி விடுதி) புத்தக அங்காடியில் தமிழ்நிலம் இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். ஒரு திங்கள் காலமாகத் 'தமிழ்நிலம்' வரவில்லை என்று சொன்னார்கள், பொருளியல் தட்டுப்பாடு காரணமாகத் தமிழ்நிலம் வெளிவரவில்லை என்று தோன்றுகிறது. எப்பொழுது வெளிவரும் என ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நீங்கள் தென்மொழி—தமிழ்ச்சிட்டு — தமிழ்நிலம் ஆகிய மூன்று இதழ்களுக்கும் ஆசிரியஉரைக் கட்டுரைகள், பாடல்கள், எழுதவேண்டும். உ.த.மு.க. பயிற்சி வகுப்புகள், மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள், பொதுகூட்டங்கள், இயக்கச் சுற்றுச் செலவுகள்— இத்தனைப் பணிகளுக்கும் இடையிலும் என்னைப்போன்ற தொண்டர்களுக்கு மடல் வரைய இயலாமலும், இருக்கலாம் அல்லது காலத்தாழ்த்தம் ஆகலாம்.

எனினும் என்னைப்போன்றவர்களுக்கு உங்கள் மடல் வந்தால் எங்கள் உள்ளம் பூரிப்பு அடையும். தமிழ் உணர்விலும், விடுதலை உணர்வும் மேலும் வளரும் என்று ஆசைப்படுகிறேன். தாங்கள் அன்புள்ளம் கொண்டு தங்கள் பொன் கைகளால் என்னை மன்னித்து மடல் வரைவீர்கள் என்று நம்புகிறேன். ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தமிழக நிலை மீட்புக்கும், தாய்நில நலத்துக்காகவும் உங்கள் நலம் பேணவும் வேண்டுகிறேன். வணக்கம்,

இப்படிக்கு, உங்கள் அன்பு மறவாத் தொண்டன்,

— கரிகாலன், வீரமங்கலம்.

01 1051 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய தனித் தமிழ்ச் சுடரே! இலக்கியக் கருவூலமே! பாட்டுக்கடலே! பைந்தமிழ் தேனீயே!—பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களே! உங்கட்குப் பள்ளிபாளையம் தமிழ் இலக்கிய மன்றச் செயலர் ஆவத்தி. வேங்கடாசலம் எழுதும் அஞ்சல். வணக்கம். பாவேந்தர் அ. இராமலிங்கம் அவர்களது அரிய முயற்சியால் எங்களது நீண்டநாள் வேட்கையைத் தணிக்கும் வகையில், எங்களது வேண்டுகோளை ஏற்றுத் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பெரிதும் சிறப்பித்தமைக்கு எங்களது உளங்கனிந்த அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். —பாவலர் ஆவத்தி. வேங்கடாசலம், ஈரோடு-8.